# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, மார்ச் 29 2019. இதழ் - 57



அரங்கம் செய்திகள்
விளம்பரங்களுக்கு
071 399 909 1
arangamnews@gmail.com




**கடவுளின் தொழில்!**

மகத்தான தொழில்.மாண்புமிக்க தொழில் - மருத்துவம். மனிதனின் ....

பக்கம் - 03



**தமிழ் மக்களும் கதாநாயக அரசியலும்**

தமிழர்களுடைய நியாயமான கோரிக்கைகளும்...

பக்கம் - 04



**மட்டக்களப்பில் வக்கிக்கரத்தை யிலிருந்து ஆட்டோ ரிக்ஸா வரை**

கடந்த இதழில் ஆட்டோ ரிக்ஸா சங்கத்தின்

பக்கம் -07



**களிமண்ணைக்கொண்டு பொருட்கள் உற்பத்தி செய்வதில் கொடிகட்டி பறந்த படுவான்கரை**

பக்கம் - 05





# 'மகனின் மரணத்திற்கு காரணமானவர்களை விசாரணை செய்யுங்கள்'

## மருத்துவமனையில் உயிரிழந்த சிறுவனின் பெற்றோர் உருக்கம்!

(நிலவன்)

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்த தங்களது மகனின் மரணம் குறித்து விசாரணை செய்யுமாறு உயிரிழந்த சிறுவனின் பெற்றோர் மட்டக்களப்பு பொலீஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த 19ஆம் திகதி போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த 9 வயதுடைய விதுலஷ்சன், வேறு ஒருவருக்கு ஏற்றவேண்டிய இரத்தத்தினை மாற்றி ஏற்றியதால் உயிரிழந்ததாக கூறியே அவரது பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள வந்தாறுமூலை பலாச்சோலையைச் சேர்ந்த ஜெயக்காந்தன் விதுலஷ்சன் (9 வயது) கடந்த முதலாம் திகதி விபத்தில் காயமடைந்த நிலையில் செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்த நிலையில் பக்கத்து கட்டிலில் உள்ள ஒருவருக்கு ஏற்றவேண்டிய இரத்தத்தை குறித்த சிறுவனுக்கு மாற்றி ஏற்றியுள்ளதாக சிறுவனின் பெற்ரோர் கூறுகின்றனர்.



இதனையடுத்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த சிறுவன், மீண்டும் நோய்வாய்ப்பட்டுள்ளார்.

அதன்பின்னர் அவரை அவசர சிகிச்சை பிரிவுக்கு மாற்றியுள்ளனர். இதன்போது

தொடர்ச்சி... (பக்கம் -02)

# கொழும்பில் கடத்தப்பட்ட பதினொரு தமிழர்கள் கொலை- விசாரணை அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பு-

## முன்னாள் கடற்படைத் தளபதியிடம் தொடர் விசாரணை-

(நி. அமிர்தஸன்)

இலங்கையின் தலைநகர் கொழும்பு தெஹிவளை, கொட்டாஞ்சேனை ஆகிய பிரதேசங்களில் ஐந்து தமிழ் மாணவர்கள் உட்பட பதினொரு தமிழர்களை கடத்திச் சென்று கப்பம் கோரிய சம்பவம் தொடர்பாக இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரால் வசந்த கரன்னாகொடவிடம் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கைக் குற்றப்புலனாய்வுப் பிரிவு கூறியுள்ளது.

எதிர்வரும் ஏப்பரல் மாதம் நான்காம் ஆம் திகதி விசாரணைகள் மீண்டும் நடைபெறவுள்ளன. கடந்த மார்ச் 19 ஆம் திகதி நான்கு மணிநேரமும் பதினொராம் திகதி எட்டு மணிநேரமும் பதின்மூன்றாம்



திகதி ஆறு மணி நேரமும் விசாரணைகள் நடத்தப்பட்டதாக இலங்கைக் குற்றப் புலனயவுப் பிரிவின் சமூக கொள்ளை தொடர்பான விசாரணைப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா, நேற்றுப் புதன்கிழமை கோட்டை நீதிவானுக்கு அறிவித்திருந்தார்.

அதேவேளை, மாணவர்கள் உள்ளிட்ட பதினொரு தமிழர்கள் கடத்தப்பட்டமை குறித்து முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட முழுமையாக அறிந்திருந்தார் என்றும் விடயங்களை மூடி மறைத்துள்ளமை விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் குற்றப்புலனாய்வுப் பிரிவு நீதிமன்றத்தில் கூறியுள்ளது.

பதினொரு தமிழர்களும் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டதை, இலங்கைக் கடற்படையின் முன்னாள் புலனாய்வு பிரதானியும் தற்போது ரியர் அட்மிரால் அதிகாரியுமான ஆனந்த குருகே, கரன்னாகொடவின் ஆலோசகராக பதவி விகித்த கொமாண்டர் உதயகீர்த்தி பண்டார, முன்னாள் கிழக்கு கட்டளைத் தளபதி ரியர் அட்மிரால் துஷாத் வீரசேகர ஆகியோரிடம்

தொடர்ச்சி... (பக்கம் -15)


ஊழலை ஒழிப்போம்!
அதற்கு எதிராக குரல்கொடுப்போம்
தமிழிலும் இலவச சட்ட ஆலோசனை பெற அழையுங்கள்
011 2 501 503
TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity
நேர்மையின் புகலிடம்
இல: 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு - 05
Email: help@tisrilanka.org Web: www.tisrilanka.org
மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76




## சாய்ப்புச்சட்டம் 3 வாரங்களுக்குத் தளர்வு

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மார்ச் 31ம் திகதி முதல் சித்திரை 15ம் திகதி வரை மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் சாய்ப்புச்சட்டம் தளர்த்தப்படுவதாக மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

இது தொடர்பாக விபரித்த அவர், மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் ஞாயிறு தினங்களில் பலசரக்குக் கடைகள், உணவகங்கள், மருந்தகங்கள் தவிர்ந்த ஏனைய கடைகள் அனைத்தும் மூடப்படல் வேண்டும் என்று வர்த்தக சங்கத்தினரும், மாநகர சபையும் இணைந்து எடுத்த தீர்மானத்திற்கு ஏற்ப இதுவரை காலமும் ஆதரவு நல்கி வந்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்தோடு பொதுமக்களின் வசதி கருதி எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டு தினத்தினை முன்னிட்டு குறித்த தீர்மானமானது மூன்று வாரங்களுக்கு தளர்த்தப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கமைய மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் செயற்படுகின்ற அனைத்து வர்த்தக நிலையங்களும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்து இந்தப் பண்டிகை காலத்தில் எமது மக்கள் சந்தோசமாகவும் சௌகரியமாகவும் கொண்டாட வழியமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இம்மாதம் 31ஆம் திகதி முதல் சித்திரை மாதம் பதினைந்தாம் திகதி வரை உள்ள மூன்று வார காலத்திற்கு மேற்படி தளர்வானது நடைமுறையில் இருக்கும் என்று தெரிவித்தார்.

## கிழக்கு மாகாணமட்ட குறுநாடகப் போட்டியில் கொல்லநுலை விவேகானந்த முதலிடம்

(படுவான் பாலகன்)

கிழக்கு மாகாணமட்ட குறுநாடகப் போட்டியில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம் முதலிடத்தினைப் பெற்றுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால், கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையில் நடாத்தப்பட்ட மாகாணமட்ட குறுநாடக போட்டியிலேயே கொல்லநுலை விவேகானந்த வித்தியாலய "தோப்பிழந்தோம்" குறுநாடகம் முதலிடத்தினைப் பெற்றுள்ளது.

இதனை கொல்லநுலை விவேகானந்த வித்தியாலய "நாடகமும் அரங்கியலும்" பாட ஆசிரியர் சதாசிவம் முகுந்தன் நெறியாழ்கை செய்துள்ளார்.

குறித்த நாடகத்தில் நடித்த மாணவன் ஒருவனுக்கு சிறந்த நடிகருக்கான விருதும், நாடகத்தினை நெறியாழ்கை செய்த ஆசிரியருக்கு சிறந்த நெறியாழுருக்கான விருதும் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கல்லடியில் ''மட்டு முயற்சியாண்மை கண்காட்சி - 2019 ''

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும்பொருட்டு "மட்டு முயற்சியாண்மை - 2019 " எனும் தொனிப்பொருளில் மாவட்ட செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினால் எதிர்வரும் ஏப்ரல் 18 ,19 மற்றும் 20 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் காலை 10 மணி தொடக்கம்

தொடர்ச்சி... (பக்கம் -15)

## 'உதிர்தலில்லை இனி' சிறுகதை நூல் அறிமுகம்



மாலை மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை(23 -03-2019) மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கனடா ஸ்ரீ ரஞ்சனி விஜேந்திராவின் "உதிர்தலில்லை இனி" என்ற சிறுகதை நூல் அறிமுக நிகழ்வில் பிடிக்கப்பட்ட படம். இதற்கான ஏற்பாடுகளை மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் மைக்கல் கொலின் செய்திருந்தார்.

படங்கள். பா. மோகனதாசன்(நன்றி)

## பௌத்த விகாரையில் பிள்ளையார் ஆலயம்

மட்டக்களப்பு ஜெயந்திபுரம் பௌத்த விகாரை வளாகத்தில் விநாயகர் ஆலயம் ஒன்று அமைக்கப்படுகின்றது.

இதற்கான அடிக்க;ல் நாட்டும் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.

இனங்களுக்கிடையில் நல்லிணகத்தை ஏற்படுத்தும் வகையில் மட்டக்களப்பு ஜெயந்திபுரம் பௌத்த விகாரை விகாராதிபதி பட்ட பொல குனானந்த நாயக்க தேரரின் ஆலோசனைக்கு அமைய, மட்டக்களப்பு ஜெயந்திபுரம் பௌத்த விகாரை வளாகத்தில் பிள்ளையார் ஆலயம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

மாவட்ட செயலக செல்வ விநாயகர் ஆலய பிரதம குரு ஜெகதிஸ்வர குருக்கள் தலைமையில் தீபாராதனை வழிபாடுகளுடன் இடம்பெற்ற அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பிரதம விருந்தினராக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் எம் .தயாபரன் கலந்துகொண்டு அடிகல்லினை நாட்டிவைத்தார். இதனைத் தொடர்ந்து நிகழ்வுக்கு வருகை தந்த பொது மக்களும் இணைந்து ஆலயத்திற்கான அடிக்கல்லினை நாட்டிவைத்தனர்

தொடர்ச்சி...

## 'மகனின் மரணத்திற்கு காரணமானவர்களை விசாரணை செய்யுங்கள்'

சிறுவனின் சிறுநீரகப் பகுதியில் கசிவு ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து கடந்த 17ஆம் சிறுவன் அசைவற்று காணப்பட்டதை அவதானித்த பெற்றோர், வைத்தியர்களிடம் இது தொடர்பில் தெரிவித்துள்ளனர், இதன்போதே குறித்த சிறுவனுக்கு தவறான முறையில் இரத்தம் ஏற்றப்பட்டதால் சிறுவன் உயிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

18 நாட்களின் பின்னர் குறித்த சிறுவன் மரணமடைந்துள்ளார்.

சிறுவனின் இறப்புக்கு காரணம் இரத்தத்தை மாற்றி ஏற்றியதாலேயே சிறுநீரகம் இரண்டும் பாதிக்கப்பட்டு சிறுவன் உயிரிழந்ததாக வைத்தியர் தம்மிடம் கூறியதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த சிறுவனின் தந்தை,

"மகனுக்கு இரத்தம் ஏற்ற வேண்டிய தேவை இல்லாத போதிலும் அந்த பெண் வைத்தியர் வேறு நோயாளிக்கு ஏற்ற வேண்டிய இரத்தத்தை எனது மகனுக்கு ஏற்றியுள்ளார். இதனால் எனது மகன் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து பிரேத பரிசோதனை இடம்பெற்ற பின்னர், இரத்தம் மாற்றி ஏற்றப்பட்டதால் எனது மகன் மரணித்துள்ளதாகவும் விபத்தால் மரணிக்கவில்லை என்றும் பொலிஸாரிடம் அறிக்கை வழங்கியுள்ளதாக சட்டவைத்திய அதிகாரி என்னிடம் தெரிவித்தார். பயிலுனர்களாக வரும் வைத்தியர் களாலேயே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. எனவே எனது மகனுக்கு நீதிவேண்டும். பிழை செய்தோர் தண்டிக்கப்படவேண்டும்" என சிறுவனின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இந்த குற்றச்சாட்டு தொடர்பாக மட்டு போதனா வைத்தயசாலை பணிப்பாளர் திருமதி கே. கணேசலிங்கத்துடன் தொடர்புகொண்டபோது

"கடந்த 19ஆம் திகதி போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த 9 வயதுடைய விதுலக்ஷனின் மரணம் தொடர்பாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு குறித்து உடனடியாக அதனுடன் தொடர்புடையவர்கள் அனைவருக்கும் முதலில் விளக்கம் கோரி கடிதம் அனுப்பியுள்ளேன்.

அவர்களிடமிருந்து கோரப்பட்ட அந்த விளக்க கடிதம் கிடைத்தவுடன் விசாரணைக்குழு அமைத்து உடன் விசாரணை செய்யப்பட்டு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும். யாராக இருந்தாலும் பிழை இழைத்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள்" என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இதுபோன்று நிலவும் பிரச்சினைகளால் சில உயிர்கள் அநியாயமாக பலியாகியதாகவும் பலர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சில உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர் . இது குறித்து கடுமையான விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் குறித்த சிறுவனின் மரணம் நிகழ்ந்துள்ளது.

## வி லங்கா செயற்திட்டத்தின் கரையோரங்களை பாதுகாக்கும் திட்டம்

மட்டக்களப்பு கிறிஸ்தவ வாலிப சங்கமும் மட்டக்களப்பு வி லங்கா அமைப்பும் இணைந்து " ஒன்றாய் இணைந்து வேலை செய்வோம் வெற்றி பெறுவோம் " எனும் தொனிப்பொருளில் மாவட்டத்தின் சுமார் 150 இளைஞர் யுவதிகளை கொண்டு இயற்கை வளங்களை பாதுகாக்கும் நோக்குடனான செயற்திட்டம் மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டது.

எதிர்காலச் சந்ததிகள் எவ்வாறு வாழவேண்டும் என்ற முன் உதாரண செயற்பாட்டுக்காக இந்த செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு அமைய கரையோர பகுதிகளில் காணப்பட்ட பொலித்தீன்களை அகற்றல் மற்றும் மரக்கன்றுகளை நடுகை செய்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

## கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 352 பட்டதாரி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

கிழக்கு மாகாணத்தில் பாடசாலைகளில் காணப்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களை நிவர்த்திசெய்யும் வகையில் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் சித்திபெற்ற மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த 352 பட்டதாரி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வினால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஜ.கே. ஜீ.முதுபண்டா தலைமையில் திருமலை உவர்மலை இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

வைபவத்தில் மாகாண பிரதம செயலாளர் டீ.எம்.சரத் அபயகுனவர்தன உள்ளிட்ட கல்வி அமைச்சு மற்றும் கல்வித்திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் என பலரும் பங்கேற்றனர்.

# கடவுளின் தொழில்!

மகத்தான தொழில். மாண்புமிக்க தொழில் - மருத்துவம்.

மனிதனின் இருப்பின் ஆதாரமாகவும் திகழ்வது இதுதான். அதனால், அதனைச் செய்பவர்கள் கடவுளாக அல்லது கடவுளுக்கு அடுத்த படியாக மதிக்கப்படுகிறார்கள். அதில் எந்தக் குறையையும் காணமுடியாது. அவர்கள் விமர்சிக்கப்பட்டாலும் அவர்களின் மகத்துவத்தை எவராலும் குறைத்துவிடமும் முடியாது.

ஆனால், அண்மைக்காலமாக, குறிப்பாக மட்டக்களப்பு பகுதியில் அரச மருத்துவர்களின் அல்லது சக மருத்துவ ஊழியர்களின் செயற்பாடுகளில் "தவறுகள் நடந்துவிட்டன" என்ற வகையில் சில செய்திகள் வரத்தொடங்கியிருக்கின்றன. இதற்கு முன்னரும் சில வருடங்களுக்கு முன்னதாக இப்படியாக குற்றச்சாட்டுக்கள் கிளம்பின. இத்தகைய குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதில் ஊடகத்துறையினர் முன்னின்றதால், அதனைவிட சில கட்டுப்பாட்டுக்குள் அடங்காத சமூக ஊடகங்கள் நியமங்களை மீறி மருத்துவர்களை தனிப்பட்ட வகையிலும் விமர்சிக்கத்தொடங்கியதால் இந்த இரு தரப்புக்கும் இடையே உறவும் பலவீனமடைந்திருந்தன.

இப்போது மீண்டும் மருத்துவமனையில் அல்லது அவர்களது செயற்பாட்டால் சில இறப்புகள் என்ற வகையில் செய்திகள் வரத்தொடங்கியிருக்கின்றன. அவை சட்டபூர்வமாக இன்னமும் நிரூபிக்கப்படவில்லையாயிலும் அவை குறித்து புகார்கள் கிளம்பியுள்ளமையும், மருத்துவமனையின் சார்பில் அவை குறித்து விசாரணைகள் நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளமையும் பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. இப்படியான சூழ்நிலையில் இத்தகைய பொதுக்கவலைகள் நியாயமானவையே. ஆனால், குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படும் வரை எவரையும் குற்றவாளிகளாக பார்க்கும் நிலையை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதில் "அரங்கம்" கரிசனையோடு இருக்கிறது.

மறுபுறம், மக்களுக்கு அரச(மருத்துவ) சேவையில் எந்தவிதமான தவறுகளும் இடம்பெற்றுவிடக் கூடாது என்பதிலும் நாம் அக்கறையுடன் இருக்கிறோம்.

குற்றம் நிரூபிக்கப்படும் வரை எவரையும் குற்றவாளியாக நாம் முன்னிறுத்த முடியாவிட்டாலும், பொது அச்சத்தை, பொதுமக்கள் கருத்தை நாம் புறக்கணித்துச் செல்ல முடியாது.

அதேவேளை, இந்த விடயத்தில் மருத்துவத்துறையும் குறிப்பாக மக்களால் தெய்வத்துக்கு அடுத்தபடியாகவேனும் மதிக்கப்படும் மருத்துவர்களும் இத்தகைய அச்சத்தை ஏற்படுத்தும் சூழ்நிலை ஏற்படாத வண்ணம் முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியுள்ளதையும் நாம் வலியுறுத்த விரும்புகிறோம். இதே பொறுப்பு ஊடகங்களுக்கு இருப்பதையும் நாம் ஏற்கிறோம்.

தவறுகள் நடக்காமலேயே இருப்பதில்லை. தவறுக்கு மனித வாழ்வில் இடம் நிச்சயமாக இருக்கிறது. ஆனால், பொறுப்புக்கூறல் என்பது போரில் ஈடுபட்டவர்களுக்கு மாத்திரமல்ல, அரச மருத்துவ அதிகாரிகளுக்கும் இருக்கிறது. அதனை அவர்களும் உணர்ந்து, பொதுமக்கள் அச்சத்துக்கு பரிகாரம் தேடவேண்டும். அச்சமே முழுமையாக தவறு என்றாலுங்கூட அதனை தணிக்கும் பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிறது. அந்த விடயத்தில் அவர்களுக்கு உதவ ஊடகங்களாக நாமும் தயாராக இருப்போம்.

மருத்துவத்துறைக்கும் ஊடகத் துறைக்கும் இடையில் முன்னர் ஏற்பட்ட மன வருத்தங்களின் போது இரு தரப்பும் அடிக்கடி மனம்விட்டு பேசவேண்டும், நிலைமை குறித்து தகவல்களை சரியாக பரிமாறிக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் முன்னர் உடன்பாடு காணப்பட்டதாகவும், ஆனால் அதற்கான ஏற்பாடுகள் பின்னர் கைவிடப்பட்டதாகவும் ஊடகத்துறையைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர். அப்படியான புரிதல்களுக்கான ஏற்பாடுகள் தேவை. இரு தரப்பும் இரு தண்டவாளக் கம்பிகள்தான், சமாந்தரமாக இருந்தால் மட்டுமே "பொதுமக்கள் சேவை" என்னும் புகையிரதம் தடம்புரளாது ஓடும்.

நிலைமையை பொறுமையுடன் கையாள்வோம்.

**அன்புடன்**
**சீவகன் பூபாலரட்ணம்**

அரங்கம் செய்திகள்
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
அரங்கம் பத்திரிகையில் விளம்பரம் செய்ய
சிறப்புத் தள்ளுபடி முழுப்பக்க விளம்பரங்களுக்கு
ரூபாய் பத்தாயிரம் மாத்திரமே!
071 399 909 1

# மின்சார வெட்டு: 'கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்'



அண்மையில் ஆரம்பித்திருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட மின்வெட்டு இலங்கை மக்களுக்கு மாத்திரமல்ல, மின்சாரசபை பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் பெரும் மின்னதிர்ச்சியாகத்தான் இருக்கிறது போலும். இதைப் பற்றி பேச அழைத்தாலே எல்லோரும் ஓடி ஒழிகிறார்கள்.

அண்மையில் சில நாட்களுக்கு முன்னதாக நுரைச்சோலை அனல் மின்நிலையத்தின் ஒரு மின்பிறப்பாக்கி பழுதடைந்துவிட்டதாக காரணம் கூறி சீரற்ற வகையில் நாட்டில் சில பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்ட இந்த மின்வெட்டு, இப்போது வேறு காரணங்களும் கூறப்பட்டு, தினசரி 4 மணிநேரங்கள் என பல இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் ஏன் மின்வெட்டு, எதற்காக மின்வெட்டு என்று கேட்டால் மின்சார சபையின் அதிகாரிகள் கிட்டத்தட்ட "தந்தை செல்வா"வின் நிலைக்கு தள்ளப்பட்டுவிடுகிறார்கள்.

ஆம், 'தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று இயலாமையில் உச்சத்தில் தந்தை செல்வா கூறியதுபோல, மின்வெட்டை எப்படி தவிர்க்கலாம் என்றால், ஒரு நீண்ட விளக்கத்தை தந்து இறுதியில் 'இது எங்கள் கைகளில் இல்லை' என்றும் கடவுளின் கையில்தான் இருக்கிறது என்பது போலும் பதிலளிக்கிறார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை இது நீர் மின் உற்பத்திநிலையங்களை பெரும்பாலும் மின்சாரத்துக்காக காத்திருக்கும் ஒரு நாடு. ஆதிமுதல் நிலைமை இதுதான். ஆகவே வருடாவருடம் மழை குறையும் நாட்களில் மின்வெட்டு செய்வதைத்தவிர வேறு வழியில்லை. போதாக்குறைக்கு சுமார் 30 ஆண்டுகாலம் போரில் நாம் நிறைய விரையம் செய்துவிட்டதால், மின்சாரத்துறையில் முதலீடு ஆக்கபூர்வமாக இருக்கவில்லை. ஆக்கத்திறனுடனான வழிகளையும் நாம் கண்டுபிடிக்கவில்லை.

ஒழுங்காக ஓடும் "ஆற்று நீரை" சரியாக சேமித்து வைக்கவோ, வெள்ளகாலத்தில் விரையமாகும் நீரை தடுத்து வைக்கவோ கடந்த பல தசாப்தங்களில் வெற்றிகரமாக நாம் எதுவும் செய்யவில்லை.

ஆகவே 3 தசாப்தம் போரிலும் போய்விட்டதால், மாசி மாதம் வந்தாலே மின்வெட்டு என்ற நிலை வந்துவிட்டது.

இடையில் அனல் மின்நிலையம், வாயு மின்பிறப்பாக்கிகள் என்று பல முயற்சிகளில் இறங்கினாலும் இவை முழுமையான மின் விநியோகத்துக்கு உதவவில்லை.

**சீவகன் பூபாலரட்ணம்**

போதாக்குறைக்கு மின்சார சபைக்கு பொதுமக்களிடம் இருந்து திட்டு வாங்கிக்கொடுக்கும் வகையில் நுரைச்சோலை அனல் மின்நிலையமும் தன் வேலையைக் காண்பித்துவிட்டது. ஒரு இயந்திரம் பழுதடைய, அதனை திருத்தினாலும் அதனால் முழுமையான மின் உற்பத்தியை செய்ய முடியவில்லை. அத்தோடு நீரேந்தும் கொள்ளிடங்களில் மழை பொய்த்ததால் நீர்மட்டமும் குறைந்துவிட்டது.

இது "ஒருவனுக்கு எத்தனை வழியில்தான் பாதகம் நடக்கும்" என்ற மாதிரி மின்சார சபைக்கு சோதனையாக அமைந்துவிட்டது. மத்தளத்துக்கு எல்லாப்பக்கமும் அடி.

சரி அடுத்தது என்ன செய்யலாம் என்று மின்சார அதிகாரிகளைக் கேட்டால், சூரிய மின்சாரம் தயாரிக்கலாம், காற்று மின்சாரம் தயாரிக்கலாம் என்று பல திட்டங்களை கையில் வைத்து காரணம் கூறுகிறார்கள். ஆனால், இறுதியில் இவை எவற்றாலும் மின்சாரப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்க முடியாது என்றும் அவர்களே கூறுகிறார்கள்.

அப்படியானால், என்ன வழி என்று கேட்டால், கடவுளுக்குத்தான் வெளிச்சம் என்று சொல்லாமல் சொல்கிறார்கள். அரச அதிகாரிகளாக இருப்பதில் உள்ள சிரமத்தை அவர்களின் மூலம் நாம் பூரணமாக உணர்ந்துகொள்ள முடிகிறது. அவர்கள் உண்மையில் பாவந்தான்.

மறுபுறம் அரசியல்வாதிகளை பார்த்தால், எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் 'சீனா வந்தாக, ஜப்பான் வந்தாக, இந்தியா வந்தாக' என்று அடுத்தவர்களுக்கு எதிராக புட்டுப் புட்டு வைக்கிறார்களே ஒழிய இதுவரை ஆக்கபூர்வமாக தாம் எதனையும் செய்ததாகக் கூற அவர்களிடம் ஆதாரம் எதுவும் கிடையாது.

தொடர்ச்சி... (பக்கம் -05)

# சொல்லத் துணிந்தேன்!



தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்

கிழக்கு மாகாண ஆளுனராக எம். எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் அவர்கள் நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்குமுகமாக சில தமிழ் அமைப்புக்களின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்தின் தமிழ் பிரதேசங்களில் கடையடைப்பு மற்றும் ஹர்த்தால் நடைபெற்றன.

ஹிஸ்புல்லாஹ் அவர்கள் ஆளுனராக நியமிக்கப்பெற்றது சரியா? பிழையா? என்பதை ஆராய்வது இந்தப் பத்தியின் நோக்கமல்ல.

கிழக்கு மாகாணத்தில் தமிழர் ஒருவர் நியமிக்கப்பெறுதலை சாத்தியமாக்கக் கூடியவாறான அரசியலை கிழக்கு மாகாணத் தமிழர்கள் கைக்கொள்ளாமல்

- வெறுமனே கோஷங்களையும் கோரிக்கைகளையும் மட்டுமே முன்வைக்கின்ற வங்குரோத்து அரசியலை வைத்துக்கொண்டு, முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர், அது ஹிஸ்புல்லாவோ அல்லது வேறு ஒருவராகவோ இருந்தாலும் சரிதான், அவர் ஒரு முஸ்லிம் என்பதற்காக எதிர்ப்பதென்பது அறிவுபூர்வமான அரசியல் அணுகுமுறையல்ல.
அது வெறுமனே தமிழ் - முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படச் செய்யுமே தவிர நல்ல விளைவுகளைத் தராது.

வெள்ளம் வரமுன்னம் அணைபோட வேண்டுமே ஒழிய அது வந்த பின்னர் அணைபோட முயல்வது முட்டாள்தனம்.

கிழக்கு மாகாண ஆளுனராக தமிழர் ஒருவரை நியமிக்கச் செய்யவதற்கு தமிழர்களின் அரசியல் தலைமையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னரே முயன்று அதில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால் முன்பு கிழக்கு மாகாண சபையில் 11 ஆசனங்களை வைத்துக்கொண்டு ஏழு ஆசனங்களை கொண்டிருந்த முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியை தாரை வார்த்துக் கொடுத்த பாவத்துக்கு பிராயச்சித்தமாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேடியிருக்கலாம்.

உண்மையில் கிழக்கு மாகாணத் தமிழர்கள் மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆத்மார்த்தமான அக்கறை கிடையாது. கிழக்கு மாகாணத் தமிழர்களின் சமூக பொருளாதார நலன்களை பேணும் வகையில் அரசியல் பெறுபேறுகளை வென்றெடுக்கக்கூடிய ஆற்றலோ ஆளுமையோ தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் கிடையாது. இக்கட்சியில் இருந்த, இருக்கக்கூடிய கிழக்கு மாகாணத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய, பிரதிநிதித்துவப் படுத்துகின்ற மாகாணசபை உறுப்பினர்கள் என்றாலும் சரிதான் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் என்றாலும் சரிதான் வினைத்திறன் அற்ற வெறும் “கோது”களாகவே அவர்கள் உள்ளனர். இதற்குக் காரணம், தலைமைப் பீடத்துக்கு தலையாட்டுகின்ற “பொம்மை”களையே தேர்தல்களில் வேட்பாளர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்ந்தெடுத்து நிறுத்துகின்றது. அர்ப்பணிப்புடன் செயற்படக் கூடிய ஆளுமையும், ஆற்றலும் உள்ள ஆட்களை வெட்பாளர் தெரிவின் போது அடையாளம் காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பீடம் விரும்புவதில்லை. காரணம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பீடம் “ஊமையன் சபையில் உளறுவாயன் மகாவித்துவான்” போலவே இருக்க விரும்புகிறது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரைப் பொறுத்தவரை கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக அல்லது ஆளுனராக இன்னுமொரு தமிழர் இருப்பதை அவர் விரும்பவில்லைப் போல் தெரிகிறது. ஏனெனில், அவ்வாறு வருகின்ற தமிழர் தன்னை மேவிவிடுவாரோ என்கின்ற உளவியல் பயம் அவரிடம் உள்ளதோ என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது.

கிழக்கு மாகாணத் தமிழர்களின் சமூக, பொருளாதார, அரசியல் நலன்களைவிடத் தன்னுடைய விருப்பு வெறுப்புகளுக்கும் ஆசாபாசங்களுக்குமே அவர் முன்னுரிமை அளிப்பதுபோல் படுகிறது. இது மக்கள் அரசியல் அல்ல. தனக்கான அரசியல்.




# தமிழ் மக்களும் கதாநாயக அரசியலும்

தமிழர்களுடைய நியாயமான கோரிக்கைகளும் போராட்டங்களும் 70 வருடங்களாக முடிவின்றி நடந்து கொண்டிருப்பதற்கு பல காரணங்களை முன்வைக்க முடியும். அதில் ஒரு காரணமாக தமிழர்களின் கதாநாயக அரசியலைக் குறிப்பிடமுடியும்.

கதாநாயக விம்பம் என்றால் என்ன என்று தெரியாதவர்கள் தமிழ் சினிமாவில் வரும் கதாநாயகர்களை உதாரணமாகக் கொள்ளலாம். நல்லவராக, திறமைமிக்கவராக, வீரராக, தவறுகள் செய்யாதவராக இருப்பதோடு தவறு செய்பவர்களை தனி ஒருத்தராக நின்று அடித்து, விழுத்தி, தண்டிப்பது தொடக்கம் நாட்டில் காணப்படும் சமூக, அரசியல் பிரச்சினைகளையும் தனி ஒருத்தராக மோதி தீர்த்து வைப்பார். இவையெல்லாம் நடப்பது சாத்தியமற்றது என்று தெரிந்தும் பெருமளவானவர்களின் உளவியல் சினிமாவின் தனிமனித சாகசங்களில் திருப்தி கொள்கிறது.

இந்த சினிமா கதாநாயகர்களைப் போன்று தமிழர்களுடைய அரசியல் வரலாற்றிலும் தமிழ் உயர் வர்க்கத்தினராலும் அவர்களுடைய ஊடகங்களினாலும் கதாநாயகர்கள் உருவாக்கப்படுகிறார்கள். தான் கஸ்ட்டப்படாமல் தனக்கு ஏதும் நிகழாமல் தனக்கு என்னவெல்லாம் தேவையோ அவை எல்லாவற்றையும் இந்தக் கதாநாயகர்கள் பெற்றுக்கொடுப்பார்கள் என மக்கள் நம்பவைக்கப்படுகிறார்கள். கதாநாயகர்களை உருவாக்கி மக்களை நம்பவைத்து தங்களுக்கான அரசியல், சமூகநலன்களை இந்த உயர் வர்க்கம் அறுவடை செய்து கொண்டே வந்திருக்கின்றது.

கதாநாயகர்களும் தமக்குக் கிடைக்கும் அந்தஸ்த்து, புகழ், என்பவற்றில் மயங்கி மக்களை மறந்து மக்களுக்கான கூட்டுத் தீர்மானம், கூட்டு உழைப்பு, கூட்டு முயற்சி, கூட்டுப்பெறுகை என்பனவற்றையெல்லாம் உதறித் தள்ளி விட்டு அனைத்தையும் தானே தீர்மானித்து செய்து முடிக்கின்ற சக்தியாக உருமாறுகிறார். இதனால் மக்கள் நலன், மக்கள் பங்கு கொள்ளல் என்பனவெல்லாம் ஓரங்கட்டப்பட்டு, மக்கள் பார்வையாளராக்கப்படுகின்றனர். இங்கு மக்கள் பங்குகொள்ளல் என்பது கதாநாயக அந்தஸ்த்துக்கும் அதன் விசுவாசத்துக்கும் கட்டுப்பட்ட ஒன்றாகவே இருக்க வேண்டுமே தவிர அதனை கேள்வி கேட்கின்ற ஒன்றாக அல்லது மாற்றுக் கருத்தை / மாற்றுச் செயற்திட்டத்தை முன்வைப்பவர்களாக இருக்கக் கூடாது அவ்வாறு யாராவது முனைவார்களாயின் அவர் வில்லனாக (துரோகி) இந்தச் சக்திகளால் உருவாக்கப்பட்டு விடுவார்.

ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றை நோக்குகின்றபோது இந்தக் கதாநாயகத் தனத்தையும் அதற்கு எதிரான போக்குடையவர்கள் வில்லன்களாகவும் (துரோகியாகவும்) உருவாக்கப்பட்டு வந்துள்ளதையும் அவதானிக்கலாம். இந்தப் போக்கினை வளர்ப்பதிலும் அதனை சமூகநிலைப்படுத்தி ஏற்புடமையாக்கியதிலும் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று தமிழ் உயர்வர்க்கமும் அவர்களுடைய ஊடகங்களும் கணிசமான பங்கினை ஆற்றியிருப்பதை விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

ஆரம்பத்தில் சேர். பொன் இராமநாதன், சேர். பொன் அருணாசம் என்கின்ற இரு மேதாவிகள் உருவாக்கப்பட்டார்கள். இவர்களுடைய கல்வித் தகமைகளும், திறமைகளும், ஆளுமைகளும் விதந்து கூறப்பட்டு, கதாநாயக விம்பம் கட்டி எழுப்பப்பட்டது. இவர்கள் தமிழர்களுக்கான தீர்வை பெற்றுத் தருவார்கள் எனவும் நம்பிக்கையூட்டப்பட்டது. ஆனால் அவர்களால் எதனையும் தமிழர்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியாமல் போய்விட்டது.

அதன் பின் தமிழர் அரசியலின் கதாநாயகனாக ஜி.ஜி.பொன்னம்பலம் உருவாக்கப்படுகின்றார். பிரித்தானியாவில் புகழ்பெற்ற பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர் என்றும் இலங்கையில் தோற்கடிக்க முடியாத சிவில் குற்றவியல் வழக்கறிஞர் எனவும் மகாராணியின் வழக்கறிஞராகவும் கடமையாற்றுபவர் என்றும் அவருடைய வாதத் திறமைகள் கதை கதையாகப் பேசப்பட்டு தமிழர்களுடைய மனங்களில் சிறுபான்மையினர் உரிமைகளைப் பெற்றுத் தரும் அறிஞராகப் உருவாக்கப்பட்டார். கதாநாயகர் சுகம் அனுபவித்தாரே தவிர தமிழ் மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை.

எழுவான் வேலன்

அடுத்து எஸ்.ஜே.வி.செல்வநாயகம் உருவாக்கப்பட்டார். நேர்மை, தியாகம், அர்ப்பணிப்பு, ஜனநாயகப் பண்பு, கொள்கைப் பற்று என கதைகள் பேசப்பட்டு தந்தையாக்கப்பட்டார். தந்தை காரியமாற்றுமாவர் என மக்கள் காத்துக் கிடந்தனர். ஆனால் அவரோ கடவுளிடம் தமிழ் மக்களைப் பொறுப்பளித்தார்.

இதன் பின் அமிர்தலிங்கம் உருவாக்கப்படுகின்றார். முன்னையவர் தந்தை என்றால் இவர் அண்ணனாக்கப்பட்டார். இந்தியாவுடன் இருக்கும் உறவும் வாதத் திறமையும் பாகிஸ்தானில் இருந்து வங்கதேசம் பிரித்துக் கொடுக்கப்பட்டது போல் தமிழீழத்தை இந்தியாவின் உதவியுடன் பிரித்தெடுப்பார் என மக்கள் நம்பவைக்கப்பட்டார்கள். ஆனால் அவரால் இந்தியாவில் தஞ்சம் புகுந்து கொள்ளத்தான் முடிந்தது.

அதன் பின் இயக்கங்கள் அவற்றின் தலைவர்கள் இதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தம்பியாக உருவாக்கப்பட்டார். அவர் மாற்று இயக்கங்களை கட்டுப்படுத்திய பின் தலைவராக்கப்பட்டு பின் சூரியத் தேவனாக உயர்த்தப்பட்டார். சூரியத் தேவனின் அஸ்த்தமனம் நம்பமுடியாதளவுக்கு முடிந்து போனது.

போர் ஒய்ந்து மீண்டும் மிதவாத அரசியல் ஆரம்பமானதும் சம்மந்தர் தமிழர்களின் கதாநாயகனாக்கப்பட்டார். அரசியல் முதிர்ச்சியும் பக்குவமும் சாணக்கியமும் கொண்ட ஒரு நாயகனாக உருவாக்கப்பட்டார். அவர்

தொடர்ச்சி... (பக்கம் -15)

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## களிமண்ணைக்கொண்டு பொருட்கள் உற்பத்தி செய்வதில் கொடிகட்டி பறந்த படுவான்கரை



'இயற்கை வளம் சூழ்ந்த படுவான்கரைப்பிரதேசம் பலரையும் கவர்ந்திருந்தமையை மறைக்கவும், மறுக்கவும் முடியாது. இயற்கைகொடுத்த மலைகளையும், வனங்களையும், குளங்களையும், ஆறுகளையும், ஓடைகளையும், வயல்நிலங்களையும் கொண்டமைந்த அழகிய பரப்பே படுவான்கரைப் பகுதியாகும். இங்கு கனிம வளங்களும் குடிகொண்டுள்ளன. ஆற்றுமணல், கிறவல், களிமண், கருங்கல் என பல வளங்களையும் இங்கு பெற்றுக்கொள்ள முடியும். இப்பகுதியில் உள்ள மக்களின் தேவைக்கு மாத்திரமின்றி, அனுமதியுடனும், அனுமதி இல்லாமலும் இவ்வாறான வளங்கள் வெளிப்பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன. இவ்வாறு அனுமதியின்றி இப்பிரதேசத்து வளங்கள் சட்டவிரோதமாக கொண்டு செல்லப்படுகின்றமையினால் இப்பகுதி வளங்கள் சூறையாடப்படுகின்றன என்பதே பொருத்தப்பாடுடையது' எனக் கூறிய விமல்ராஜ், ஒருகாலத்தில் படுவான்கரைப் பிரதேசம் கொடிகட்டிப் பறந்தது. அப்போது, படுவான்கரைப் பிரதேசத்தில் தொழிற்சாலைகளும் இருந்தன. அவை இன்று எங்கே என்று தெரியாதளவில் மூடப்பட்டுள்ளன என்றான்.

படுவான்கரைப் பிரதேசத்தின் அழகு மற்றும் சுரண்டப்படும் வளங்கள் தொடர்பில் கந்தசாமியிடம் பேசிக் கொண்டிருக்கையிலே விமல்ராஜ் இதனைத் குறிப்பிட்டான்.

இயற்கை வளங்களும் எடுக்க எடுக்க குறையாமல் இருப்பதில்லை. அவையும் குறைந்துகொண்டே செல்லும். படுவான்கரைப் பிரதேசமே அடர்ந்த வனப்பகுதியாகவே இருந்தது. இன்று குறித்த தொருப்பகுதியே வனமாக காட்சியளிக்கின்றது. அது போலத்தான் நீரோடைகளாக காணப்பட்ட 4அடி அகல வாய்க்கால்கள் அதன் இருமடங்கு பகுதிகளாக அகலமாகியிருக்கின்றன. அதேவேளை ஆழமாகவும் மாறியிருக்கின்றன. இதற்கு கடந்தகால வெள்ளமும், தோண்டப்பட்ட ஆற்றுமணலுமே காரணமாயிகியிருக்கின்றன. இதன்விளைவு வருடாந்த அடைமழையினால் பலவீதிகள் ஆறுகளாவதும், வயல்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்குவதும், கோடைகாலத்தில் விரைவாக நீர்வற்றுவதுமேயாகும்.

இயற்கை வளங்களை, மனித தேவைக்கான இருப்பிடம், வேறுதேவைகளை நிறைவேற்றுவதற்காக மனிதர்கள் பயன்படுத்திக்கொண்டனர். தற்போதும் பயன்படுத்துகின்றனர். படுவான்கரைப் பிரதேசத்தில் ஒரு



தசாப்தத்திற்கு முன்பு அமைந்திருந்த வீடுகள் பெரும்பான்மையானவை களிமண் சுவர்களையும், ஓலை, வைக்கோல் கூரையினையுமே கொண்டிருந்தன. இதனால் களிமண்தேவை இங்கு காணப்பட்டது. இதனை நிறைவேற்றுக்கொள்ளக்கூடிய வகையில் களிமண்ணும், கூரைக்கான பொருட்களும் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையிருந்தது. ஒரு சில கல்வீடுகளும் அமைக்கப்பட்டிருந்த நிலையில், இவ்வீடுகளுக்கான செங்கற்களும், ஓடுகளும் இப்பிரதேசத்திலேயே உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. குறிப்பாக கிழக்கு மாகாணத்திலே பிரசித்திபெற்ற தொழில்சாலையாக மண்டுரில் இருந்த ஓட்டுத்தொழிற்சாலை விளங்கியது. எல்லோரும் மண்டுர் ஓட்டினை தேடிவாங்குமளவிற்கு மண்டுர் ஓட்டுத்தொழிற்சாலை பிரபல்யமடைந்திருந்தது. ஆனாலும் துரஸ்திடவசமாக 1990களிலும், அதன் பின்னரும் ஏற்பட்ட அசாதாரண சூழல் ஓட்டுத்தொழிற்சாலை தொடர்ந்தும் இயங்காமல் சென்றமைக்கு காரணமென பேசிக்கொள்கின்றனர்.

ஓட்டுத்தொழிற்சாலை படுவான்கரையில் இல்லாமல் போய் பல வருடங்களாகினும், படுவான்கரைப் பிரதேசத்தில் இருந்த பல வீடுகள் இன்று கல்வீடுகளாகவும் ஓட்டினைக்கொண்ட கூரைகளாவும் மாறியுள்ளன. இக்கூரைகளுக்கான ஓடுகள் வெளிமாவட்டங்களில் இருந்தே பெறப்பட்டுள்ளன. இங்கு அத்தொழிற்சாலை இருந்திருந்தால் வெளியில் பணம் சென்றிருக்காது. படுவான்கரைமக்கள் தமது அன்றாட உணவுசமைத்தல், பரிமாறலுக்காக களிமண்ணில் செய்யப்பட்ட பாத்திரங்களையே பயன்படுத்தினர். பின்னர்வந்த நவீனத்துவம் அலுமினியம் பாத்திரங்களை பயன்படுத்தும் நிலையை உருவாக்கியிருக்கின்றது. இதனால் களிமண்ணில் செய்யப்பட்ட பாத்திரங்களின் செயற்பாடும், இப்பகுதியில் மிகவாக குறைவடைந்திருக்கின்றன. ஆனால் களிமண்ணில் செங்கல் உற்பத்தி செய்கின்ற செயற்பாடு தற்போதும் படுவான்கரைப்பிரதேசத்தில் நடைபெறுகின்றது. தமது சொந்த காணிகளில் களிமண்ணை எடுத்து அவ்விடத்திலே செங்கல்லை உற்பத்தி செய்துவிற்கின்றனர். இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் செங்கற்களுக்கான நிரந்தர விலையை தீர்மானிக்க முடியாதவர்களாக தமக்கு நிதி தேவையான சந்தர்ப்பத்தில் கேட்கும் பணத்திற்கு செங்கல்லை விற்கின்ற நிலையும் இருந்து வருகின்றமை வேதனையானதொன்று. ஒரு சில இடங்களில் மாத்திரம் செங்கல் உற்பத்தியாளர்களை இணைத்து சங்கத்தினை உருவாக்கி சங்கத்தின் ஊடாக செங்கல்லை விற்பனை செய்கின்றனர். இதன்மூலமாக நியாயமான வருமானத்தினை பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையை அவ்வாறானவர்கள் அடைந்திருக்கின்றனர். ஆனால்

**படுவான் பாலகன்**

பெரும்பான்மையான இடங்களில் அவ்வாறு நடைபெறுவதில்லை. செங்கல் உற்பத்தியாளர்களாக இருக்கின்றவர்கள் வசதிபடைத்தவர்களல்லர். கடன்பெற்றே செங்கல் உற்பத்தி நிலையத்தினை நடத்துகின்றனர். இதன்மூலம் நியாயமான வருமானத்தினை பெற்றுக்கொள்ளாமல் செல்வதென்பதனை ஏற்க முடியாது. எனவே படுவான்கரைப் பிரதேசத்தில் உள்ள செங்கல் உற்பத்தியாளர்களை இணைத்து நியாயமான வருமானத்தினை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் செயற்றிட்டங்களை அரச அதிகாரிகளும் வகுக்க வேண்டும். வகித்திருக்கின்ற அரச அதிகாரிகளுக்கு தமது நன்றிகளையும் கூறிக்கொண்டு, தனதுபேச்சை நிறுத்தியவாறே அவ்விடத்திலிருந்து அகன்றான் விமல்ராஜ்.

தொடர்ச்சி...

## மின்சார வெட்டு: 'கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்'

இன்னும் ஏப்ரல் வரமுதலே இந்த நிலை என்றால் நாளாக, நாளாக மின்வெட்டு நிலை எப்படி ஆகிவிடுமோ தெரியவில்லை. எது நடந்தாலும் வர்ணபகவானாகப் பார்த்து "கொட்டோ கொட்டென்று" கொட்டி( அதுவும் வெள்ளம் வராமலும் இருக்க வேண்டும்) ஏதாவது செய்தாலொழிய மக்களுக்கு மின்சாரம் கிடைக்க இப்போதைக்கு வழி இல்லைப் போல் தெரிகிறது.

மகா பொதுசனங்களுக்கு இருப்பது ஒரே வழிதான், இருக்கிற காற்றை வைத்து குளிர்காய்ந்துவிட வேண்டியதுதான்.

ஒரே புண்ணியம், எமது வீடுகளில் 4 மணிநேரம் தென்னிந்தியத் தொலைக்காட்சித் தொடரின் அநியாயத்தில் இருந்து எமது பெண்கள் தப்பித்திருப்பார்கள்.

அப்பாவி பொதுமக்களுக்குத்தான் (மின்சார சபை ஊழியர் உட்பட) எத்தனை எமன்?



# பட்டறிவு

## கண்டி மன்னனின் சிம்மாசனத்தை மீட்டகதை

மகாவம்ச வர்ணனைகளின்படி ஆரம்பகாலம் தொட்டே அரண்மனைகளையும், அரச சபைகளையும் ஆடம்பரமாக அலங்கரித்திருந்தது பற்றி பல இடங்களில் கூறப்படுகின்றன. சிம்மாசனங்களையும், அரசவை ஆசனங்களையும் தயாரிப்பதற்கும், ஆபரணங்கள், வாள்கள் தயாரிப்பதற்கென தனியான அரசவை நிபுணர்கள் நியமிக்கப்பட்டிருந்திருக்கின்றனர். அந்த நிபுணத்துவத்தின் அற்புதங்களை கொழும்பு அருங்காட்சியகத்தில் காண முடியும்.


அப்படி அங்கிருக்கும் ஒரு முக்கிய பொருள் இறுதி அரசரின் சிம்மாசனம். அங்கே அரசரின் மகுடமும் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிம்மாசனம் 1693இல் ஒல்லாந்து ஆளுனரான தோமஸ் வான் ரீ (Thomas van Rhee – 1691-1697) பதவி வகித்த காலத்தில் அவரால் மன்னர் இரண்டாம் விமலதர்மசூரியனுக்கு (1687-1707) பரிசளிக்கப்பட்டதாகும். ஒல்லாந்தர்களால் அது வழங்கப்பட்டபோதும் அதில் செதுக்கப்பட்டுள்ள வேலைப்பாடுகள் இலங்கையின் பாரம்பரியத்தைக் கொண்ட சிற்ப நுணுக்கங்களே என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். நீரா விக்கிரமசிங்க அது தென்னிந்திய வேலைப்பாடுகள் என்று தனது ஆய்வில் தெரிவிக்கிறார்.

ஐந்தடி உயரம், மூன்றடி அகலத்தில் மரத்தால் செய்யப்பட்ட அந்த சிம்மாசனத்தின் வெளித்தோற்றத்தில் தங்கத் தகட்டில் சிற்ப வேலைப்பாடுகளும், இரத்தினக் கற்கள் பொறிக்கப்பட்டும் காணப்படுகிறது.

இந்த சிம்மாசனத்தையும் கிரீடத்தையும் இரண்டாம் விமலதர்மசூரியனுக்குப் பின்னர் ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் (1707 – 1739), விஜயராஜசிங்கன் (1739 – 1747). கீர்த்திஸ்ரீ ராஜசிங்கன் (1747 – 1782), ராஜாதி ராஜசிங்கன் (1782 – 1798) ஆகியோர் பயன்படுத்திவிட்டு பின்னர் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் (1798 – 1815) இறுதியாக பயன்படுத்தினார்.

ஆங்கிலேயர்கள் உலகமெல்லாம் நாடுகளைப் பிடித்தபின் அந்த வெற்றியில் நினைவாக சிம்மாசனத்தையும் கிரீடத்தையும், கொடியையும், அரசனின் வாளையும், செங்கோலையும், இலட்சினையையும் தமது நாட்டுக்கு கொண்டு சென்று விடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். நெப்போலியனைத் தோற்கடித்தபின் அவனின் பிரதான கழுகுச் சின்னத்தைக் கொண்டு போய் வைத்திருந்தனர்.

3வது ஜோர்ஜ் மன்னன் இலங்கையின் இறுதி அரசனின் சிம்மாசனம், கிரீடம், வாள் என்பவற்றை அப்படித்தான் லண்டன் வின்சர் மாளிகையில் வைத்திருந்தார். அங்கேதான் இந்தியாவில்




மைசூரை ஆண்ட திப்பு சுல்தானின் சின்னங்களையும் வைத்திருந்தனர்.

பிரித்தானியா கைப்பற்றிச் சென்ற அரசுரிமைச் சின்னங்கள் பற்றிய ஒரு விரிவான பெரிய நூலொன்று 2016ஆம் ஆண்டு "கிரீடங்களும் காலனித்துவமும்" (Crowns and Colonies: European Monarchies and Overseas Empires) என்கிற தலைப்பில் வெளியாகியிருக்கிறது. 350 பக்கங்களைக் கொண்ட அந்த நூலில் இலங்கைக்கு திருப்பிக் கொடுக்கப்பட்ட அரச சின்னங்கள், பொக்கிசங்கள் குறித்த 25 பக்கக் கட்டுரையொன்று உள்ளடங்கியிருக்கிறது.

ஆங்கிலேயர்கள் ஏராளமான தங்க ஆபரணங்கள், கலசங்கள், பதக்கங்கள், வைரக்கற்கள் என ஏராளமான பொக்கிசங்களையும் கொள்ளையடித்துக்கொண்டு சென்றனர். இவற்றை 13.06.1820 அன்று "38, King Street, Covent Garden" என்கிற இடத்தில் ஏலத்துக்கு விடப் போவது குறித்த 17பக்கங்களில் ஒரு பட்டியலைக் ((Regalia ofthe King of Kandy A catalogue) காண கிடைத்தது. அது வெளியாகி 200 ஆண்டுகள் ஆகப் போகிறது ஆச்சரியமளிக்கும் விபரங்கள். இத்தனையையும் கொள்ளையடித்துக் கொண்டு போயிருக்கிறார்களே. அந்த வெளியீட்டின் அட்டையில் இப்படி இருக்கின்றன

"கண்டி மன்னனின் பொக்கிசங்கள்"
பெறுமதிமிக்க நகை சேகரிப்புகள்
தூய தங்கம், முத்துக்கள், வைரக்கற்கள், பதக்கங்கள்
தங்க மாலைகள்; குறிப்பாக 23.5 அடிகளைக் கொண்ட மாலை
விற்பனை பகல் 1 மணிக்கு சரியாக தொடங்கிவிடும்
முன்பதிவின்றி அப்போதே விற்பனையாகிவிடும்.

இந்த ஏலத்தில் சிம்மாசனம், மகுடம், வாள் என்பவை இருக்கவில்லை என்று தெரிகிறது. அன்றைய ஆளுநர் பிரவுன்றிக்கின் மகனால் அவை அனைத்தும் இங்கிலாந்துக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. பின்னர் நான்காவது ஜோர்ஜ் மன்னரிடம் அவை திருப்பிக் கொடுப்பட்டிருக்கிறது. அது வின்சர் மாளிகையில் வைக்கப்பட்டது.

எஹெலபொல கண்டி மன்னனை பிடித்தபின்னர் அரசாட்சியோடு இந்த சிம்மாசனமும், மகுடமும், வாளும் தனக்கே கிடைக்கும் என்று நம்பியிருந்த எஹெலபொலவுக்கு ஒன்றையும் கொடுக்கவில்லை ஆங்கிலேயர்கள். அவர்கள் மேற்படி அரசுரிமைச் சின்னங்கள் அனைத்தையும் இங்கிலாந்துக்கு கொண்டு கொண்டு சென்றுவிட்டனர்.

இலங்கை மக்கள் மன்னரின் இந்த முக்கிய சின்னங்கள் பற்றி மறந்தே போயிருந்தனர். 1913ஆம் ஆண்டு தான் அப்போது காலனித்துவ செயலாளராக இருந்த எட்வர்ட் ஸ்டப்ஸ் (Sir Reginald Edward Stubbs) முதன் முறையாக இந்த

**என்.சரவணன்**

சின்னங்கள் எங்கே இருக்கின்றன என்பது பற்றிய விபரங்களை அறிவித்தார்.

இதேவேளை 1924ஆம் ஆண்டு லண்டன் பத்திரிகையாளரான பிரெடிரிக் குருப் (Frederick Grubb) எழுதிய ஒரு பதிவு சிலோன் டெயிலி நியூஸ் பத்திரிகையில் வெளியானது. அதன்படி கண்டி அரசரின் சிம்மாசனம், மகுடம், வாள் என்பவை அங்கிருந்து இடம் மாற்றப்பட்டுவிட்டதென்று அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த சிம்மாசனம் ஒரு பௌத்த சிம்மாசனம் என்பதால் கிறிஸ்தவ அரசர் அருகில் வைத்திருப்பது உகந்ததல்ல என்கிற முடிவுக்கு வந்ததாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டது.

பத்திரிகையாளர் பிரெடிரிக் குருப் மீண்டும் இது குறித்து மன்னரின் கவனத்துக்கு கொண்டுவருவதற்காக மன்னரின் அந்தரங்க செயலாளரோடு அணுகி தொடர் முயற்சியை மேற்கொண்டுள்ளார். இவை நாகரீகமாக இலங்கைக்கே திருப்பிக் கொடுக்கப்படவேண்டியவை என்று விளக்கியிருக்கிறார்.

காலனித்துவ செயலாளராக இருந்த எட்வர்ட் ஸ்டப்ஸ் ஆளுநராக பதவியேற்ற காலத்தில் (1933-1937) அவரும் இந்த முயற்சியில் பங்களித்துள்ளார்.

இறுதி அரசனின் சின்னங்களை இலங்கைக்குத் திருப்பித் தருமாறு அன்றைய அரச சபை உறுப்பினர் ஜோர்ஜ் ஈ.டி சில்வா (இலங்கை தேசிய காங்கிரசின் தலைவராகவும் இருந்தவர்) 30.11.1933 அன்று ஒரு பிரேரணையை அரச சபைக்கு கொண்டுவந்து 15.02.1934 அன்று அது அரச சபையில் நிறைவேற்றப்பட்டு ஆளுனரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது பற்றிய விபரத்தை இக்கட்டுரைக்காக தேடியபோது சிங்கப்பூர் பத்திரிகையொன்றில் (The Straits Times, 13.09.1936, P5) காணக்கிடைத்தது.

இந்த முயற்சிகளைத் தொடர்ந்து மன்னர் இறுதியில் ஒப்புக்கொண்டார். பக்கிங்ஹாம் மாளிகை காலனித்துவ செயலாளருக்கு இது தொடர்பில் 1934 ஜூன் 5 அன்று ஒரு தந்தியை அனுப்பி வைத்தது. 100 வருடங்களுக்கும் மேலாக வின்சர் மாளிகையில் வைக்கப்பட்டிருந்த கண்டி மன்னனின் மகுடத்தை மக்களின் உணர்வுபூர்வமான தேவை கருதி திருப்பித் தர ஒப்புக்கொண்டதாகவும், இளவரசர் டியுக் கிளவுஸ்செஸ்டரின் இலங்கை விஜயத்தின் போது அது கையளிக்கப்படும் அந்த தந்தி குறிப்பிட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து இந்த சிம்மாசனமும் கிரீடமும் இலங்கைக்கு 1934ஆம் ஆண்டு செப்டம்பர்



23 அன்று மீண்டும் கொண்டுவரப்பட்டு, கண்டியில் பெரும் திருவிழாவாக இதற்கான வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டது. கண்டியின் பாரம்பரிய தாள வாத்திய இசையுடனும், கண்டிய நடனங்களுடனும் கோலாகலமான ஊர்வலமாக அந்த சிம்மாசனம் எடுத்துக் கொண்டுவரப்பட்டது.

இரவு 9 மணியளவில் இலங்கை பறிகொடுக்கப்பட்ட அதே கண்டி "மகுல்மடுவ"வில் வைத்து பல பௌத்த மத குருமார் மற்றும் அரச தலைவர்கள் முன்னிலையில் அவை இளவரசர் டியுக் கிளவுஸ்செஸ்டரால் (Duke of Gloucester) ஒப்படைக்கப்பட்டன. அங்கு அவர் ஒரு உரையையும் ஆற்றினார்.

அடுத்த மூன்று நாட்கள் 24-27 வரை கண்டி மன்னனின் அரசுரிமை சின்னங்கள் அங்கு மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டன. நாற்பதினாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அதைக் காணச் சென்றிருந்தனர். பின்னர் கொழும்பிலும் ஒக்டோபர் 1-நவம்பர் 14 வரை மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. 902,920 இலங்கையர்கள் அதை பார்வையிட்டனர்.

1942 இல் கொழும்பில் இருந்த இராணி மாளிகை மியூசியமாக ஆக்கப்பட்டது. கண்டி அரசனின் இந்தச் சிம்மாசனமும் கிரீடமும், வாள் உள்ளிட்ட பொருட்களும் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டன. இன்றும் அவற்றைப் பார்க்க முடியும்.

சூரியன் மறையாத சாம்ராஜ்யம் என்று மார்தட்டிக்கொள்ளுமளவுக்கு பல உலக நாடுகளை கைப்பற்றியிருந்த ஆங்கிலேயர்கள் ஏராளமான சொத்துக்களையும் பொக்கிசங்களையும் அள்ளிக்கொண்டு சென்று தமதாக்கிக்கொண்டனர். அரசுரிமைச் சின்னங்களை தனியாக தமது சாம்ராஜ்ஜிய பெருமிதத்தின் நினைவுச் சின்னங்களாக வைத்திருந்தனர். இலங்கையைத் தொடர்ந்து பர்மா,




எத்தியோப்பியா போன்ற நாடுகளின் அரச சின்னங்களை மாத்திரம் அவர்கள் திருப்பிக் கொடுத்தனர். மேலும் பல நாடுகளின் அரச சின்னங்கள் அவர்கள் வசமே இன்னமும் உள்ளன. ஆனால் ஏனைய பொக்கிசங்கள் பலவற்றை ஏலத்துக்கு விற்று பிழைத்துக்கொண்டனர்.

கண்டி ராஜ்ஜியத்தில் மாத்திரமல்ல இன்னும் பல இலங்கை அரச பொக்கிசங்களையும், புதையல்களையும் எப்படியெல்லாம் தேடித்தேடி சூறையாடினார்கள் என்பது தனிக்கதை.

# மட்டக்களப்பில் வக்கிக்கரத்தையிலிருந்து ஆட்டோ ரிக்ஸா வரை --- அங்கம்-3

கடந்த இதழில் ஆட்டோ ரிக்ஸா சங்கத்தின் இலட்சனை உருவான நிலைவரை தரப்பட்டது. சங்கத்தால் இதுவரை பாவிக்கப்படும் இலட்சனை இதுதான்.




## பயண சாதனையாளர்

இத் தொடர் கட்டுரையில் மூன்று விதமான பயண சாதனங்களின் விபரங்களை ஓரளவு குறிப்பிட்டிருந்தேன். அவை வக்கிக்கரத்தை, வாடகைக்கார், ஆட்டோரிக்ஸா என இந்த


திரு.சின்னத்துரை தங்கத்துரை

மூன்று சாதனங்களையும் காலத்துக்கு காலம் செலுத்தி தன் வாழ்வாதாரத்தையும் தனது குடும்பத்தையும் நல்லபடி வழிநடாத்தி இன்றும் கூளாவடி பிரதானவீதியை தனது தரிப்பிடமாகக் கொண்டு சவாரி பெற்று தொழில் பார்த்து வருபவர் இப்படத்தில் காணப்படும் சிரேஸ்ட பிரஜை சி.தங்கத்துரை என்பவராவார். என்பதை இந்நேரத்தில் வாசகர்களுக்கு அறியத்தருகிறேன்.

## சில ஒற்றுமைகள்

இக்கட்டுரையை எழுதிக் கொண்டு போகும் போது சில இடங்களில் சில ஒற்றுமைகளைக் காணக்கூடியதாக இருக்கிறது. அவை 01. மட்டு/மாவட்ட விவசாய பொறியியற் கூட்டுறவுச்சங்கம் (27.04.1948) பதிவு செய்யப்பட்ட திகதியும். மட்டு/ஆட்டோ சாரதிகள் சங்கம் (27.04.1994) அங்குராப்பண திகதியும் ஒன்றாகவே அமைந்திருக்கிறது. 02. இத் தொடரில் வந்த மூன்று போக்குவரத்துச் சாதனங்களிலும் தன் பங்களிப்பை செலுத்தியவருமான சின்னத்துரை தங்கத்துரை. ஆட்டோ ரிக்ஸாவை மட்டக்களப்புக்கு இறக்குமதி செய்ய ஏதுவாக இருந்த மட்டு மாவட்ட விவசாய பொறியியற் கூட்டுறவுச் சங்கத்தின் அன்றையத் தலைவரும் இன்றையத் தலைவருமான சின்னத்தம்பி சின்னராசா, மட்டு ஆட்டோ சாரதிகள் சங்கத்தின் ஸ்தாபகரும் இக்கட்டுரையாளருமான இராஜேந்திரன் தவராஜா ஆகிய மூவரும் பிறந்து வளர்ந்த இடம் கோட்டைமுனை சோனகர்தெரு என்பதும் இன்னுமொரு ஒற்றுமை.

## அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு

ஆட்டோ சாரதிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பாதிப்புகள் என்பவைகளுக்கு முகம் கொடுக்கவும் தீர்வுகாணவும் உடனடித் தேவைக்காக சங்கத்துக்கு நிதி தேவையெனக் கருதி சங்கப் பொதுச்சபை தமது அங்கத்தவர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்குமென ஓர் அதிஸ்டலாபச் சீட்டிழுப்பை நடாத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இச் சீட்டிழுப்பில் 01.சிங்கர் தையல் இயந்திரம் 02.துவிச்சக்கரவண்டி 03.எரிவாயுஅடுப்பு என பரிசுகளாக வழங்கப்பட முடிவெடுக்கப்பட்டு சீட்டொன்றின் விலை 10ரூபாவாக தீர்மானிக்கப்பட்டு, மாநகரசபையை கௌரவப்படுத்த முதலாவது சீட்டை அன்றிருந்த மாநகரபிதா அமரர் செழியன் ஜே.பேரின்பநாயகம் அவர்களிடம் கையளிக்க சென்றபோது. அவர் பலசீட்டுப் புத்தகங்களை தனக்கு வழங்குமாறு பெற்று, அவைகளுக்குரிய மொத்தப் பணத்தையும் உடனடியாக தந்துவிட்டு. சீட்டுப்புத்தகங்களை ஏனைய மாநகர அங்கத்தவர்களுக்கும் பகிர்ந்து விநியோகித்தார். அத்தோடு தலைவர் இரா.தவராஜாவின் வேண்டு கோளுக்கு இணங்கி அதற்குரிய வரியையும் வசூலிக்கவில்லை. இந் நிகழ்வின்

கலாபூசணம் அரங்கம்
இரா.தவராஜா

ஞாபகார்த்தமாக புகைப்படமும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இச்சீட்டுழுப்பு கல்லடிக் கடற்கரையில் 17.11.1994ல் பொதுமக்கள் மத்தியில் மிககோலாகலமாக நடைபெற்றது.

இந் நிகழ்வில் சங்கத்தின் அன்றையத் தலைவர் இரா.தவராஜா உரையொன்றையும் நிகழ்த்தினார். அவ்வுரை 24.11.94 தினகரன் பத்திரிகையில்




செய்தியாக வந்தது.

இவ்வாறு பல பிரயத்தனங்களுக்கு மத்தியில் வளர்க்கப்பட்ட இச்சங்கத்தை அன்றைய மாநகரசபை, பொலிசார், முக்கிய பதவிகளில் இருந்த சக்திவாய்ந்த பிரஜைகள், பயணிகள் என சகலரும் ஒத்துழைப்பு வழங்கி பெரியதொரு சங்கமாக இன்று மிளிர பேராதரவைத் தந்திருந்தனர்.

## இணக்கப்பாடு

சங்கம் ஸ்தாபனரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட காரணத்தினால். பொலிசார் சங்கத்தோடு பல பேச்சு வார்த்தைகளை நடாத்தி இனிவரும் காலத்திலும் அவைகளை கடைப்பிடிக்க வேண்டுமென சங்கமும் பொலிசாரும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தனர். அப்பேச்சு


24-11-94
THINAKARAN, THURSDAY, NOVEMBER 24,1994
தொழிலாளர் ஒற்றுமை மூலமே தமது பலத்தை வெளிப்படுத்தலாம்

வார்த்தையின் சாராம்சம் இதுதான்.

இவ்வாறு சங்கம் படிப்படியாக பயணித்து சிறப்பான பெயரைப் பெற்று வளர்ச்சியை அடைந்த வேளை சங்கத்தின் தலைவராகிய இரா. தவராஜா ஆட்டோரிக்ஸா தொழிலை விட்டு வெளியேற சங்கம் கைமாறியது. சங்கத்தின் ஆலோசகரான முன்னாள் செயலாளர் கே.சிவகுமாரனின் ஆலோசனையுடன் ஜோன்சன் என்னும் பெர்ணான்டோவின் தலைமையில் மீ.அருணன் தனாதிகாரியாக இருந்த வேளை இனிமேல் வரும் ஆட்டோக்களுக்கு தரிப்பிடஅனுமதி வழங்குவதில்லையென. பொலிசார், மாநகரசபை ஆகியோரிடம் ஆலோசிக்காமலும் ஒப்புதல் பெறாமலும் தன்னிச்சையாக முடிவெடுக்கப்பட்டு அம்முடிவு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்பட்ட இத் தீர்மானத்திற்கு பின்பும் ஆட்டோக்கள் தரிப்பிடங்களுக்கு வந்து கொண்டேயிருந்தன. இது எவ்வாறு நடைபெற்றது என்பது சம்மந்தப்பட்ட ஆட்டோ சாரதிகளுக்குத்தான் வெளிச்சம். எது எப்படியோ இன்று மாநகரத் தந்தையுடன் முரண்படக்கூடிய அளவுக்கு சக்தி படைத்த சங்கமாக ஆட்டோ சாரதிகள் நலன்புரிச்சங்கம் திகழ்வது எனக்கு ஒருபக்கம் சந்தோசமாகவும் மறுபக்கம் வேதனையாகவும் இருக்கிறது.

---

தொடர்ச்சி...

# இலங்கையில் செயற்கை மழை பொழிவதற்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட முயற்சி வெற்றியளித்துள்ளது

<u>மழைமேகங்களைத் திரட்டுதல்</u>

இந்நிலையில் மழைமேகங்கள் ஒன்றுகூட்டி திரட்டப்படுகின்றன. அதாவது யூரியா, சமையல் உப்பான சோடியம் குளோரைடு, அம்மோனியம் நைட்ரேட், உலர்பனி ஆகியவற்றைத் தூவி மழைமேகங்களின் கனமானது அதிகரிக்கப்படுகிறது.

சில நேரங்களில் மழைமேகங்களை திரட்ட கால்சியம் குளோரைடும் பயன்படுத்தப்படுவது உண்டு.

<u>மழைமேகங்களைக் குளிரச் செய்தல்</u>

ஒன்றுதிரட்டப்பட்ட மேகங்களின்மீது வெள்ளி அயோடைடு, உலர் பனிக்கட்டி ஆகியவை தூவப்பட்டு மேகங்கள் குளிர்விக்கப்படுகின்றன. குளிர்ந்த மேகங்களில் இருந்து நீர்துளியானது மழையாகப் பெய்கிறது.

சிலநேரங்களில் மழைமேகம் கறுத்திருந்தும் மழையானது பெய்வதில்லை. மேகமானது மிகவும் குளிர்ந்திருப்பதே இதற்குக் காரணம்.

மேகத்தின் வெப்பநிலை பூஜ்ஜியம் டிகிரிக்கும் குறையும்போது நீரானது பனிக்கட்டியாக மாறாமல் திரவ நிலையிலேயே இருக்கும். இதன்மீது வெள்ளி அயோடைடு அல்லது உலர்பனிக்கட்டியை தூவும்போது நீரானது பனிக்கட்டியாக மாறி அதிக அடர்த்தியின் காரணமாக உடைந்து வானிலையில் ஏற்படும் வெப்ப மாற்றத்தினால் பனிகட்டியானது நீராகி மழையாகப் பெய்கிறது

இவ்வாறு மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நிலைகளிலும் உத்திகளை வடிவமைப்பது, செயல்படுத்துவது, கண்காணிப்பது மற்றும் திறனாய்வு செய்வது போன்றவை அடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக மேகங்களின் வெப்பநிலையானது பூஜ்ஜியம் டிகிரி இருந்தால் அவை வெப்ப மேகங்கள் என்றும், பூஜ்ஜியம் டிகிரிக்கு குறைவாக இருந்தால் அவை குளிர்ந்த மேகங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

வெப்ப மேகங்களை குளிர்விக்கும்போது நீர்த்திவலைகளின் அடர்த்தி அதிகரித்து மேகங்களின் அடியிலிருந்து மழையானது பெய்கிறது. குளிர் மேகங்களை குளிர்விக்கும்போது பனிக்கட்டியின் அடர்த்தி அதிகரித்து அவை உடையும்போது வானிலையில் ஏற்படும் வெப்ப மாற்றத்தினால் பனிகட்டியானது நீராகி மழையாக பெய்கிறது.

<u>செயற்கை மழையின் விளைவுகள்</u>

செயற்கை மழைக்காக பயன்படுத்தப்படும் வெள்ளி அயோடைடு பாலூட்டிளை தற்காலிகமாக செயலிழக்கச் செய்யும். வெள்ளி அயோடைடின் அளவானது அதிகரிக்கும்போது தோலின் நிறம் மாற்றம், மறதி போன்றவற்றை உண்டாக்கும்.

செயற்கை மழையால் பனிக்கட்டி ஏரிகளில் உள்ள தாவரங்கள் பூப்பதில் பிரச்சினைகள் ஏற்படுவதாக சுற்றுசூழல் வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

பாதுகாக்கப்பட்ட இனங்களுக்காக ஆஸ்திரேலியாவில் செயற்கை மழையானது நிராகரிக்கப்பட்டுள்ளது.

செயற்கை மழையினை ஒரு குறிப்பிட்ட இடத்தில் பெய்ய வைக்கும்போது அது மற்ற இடங்களில் இயற்கை மழைப் பொழிவினை பாதிக்கிறது. செயற்கை மழைக்காக முயற்சிக்கும்போது சில நேரங்களில் மழை பெய்வதில்லை. மற்ற சில நேரங்களில் அதிக அளவு மழையானது குறைந்த அளவு நேரத்தில் பெய்து வெள்ளப்பெருக்கினை ஏற்படுத்துகிறது.

செயற்கை மழைக்காக அதிக பொருட்செலவு ஆவதும் குறிப்பிடத்தக்கது.

அடிக்கடி செயற்கை மழை பெய்விக்க அதிகளவு வேதிப்பொருட்களைப் பயன்படுத்துவதால் சுற்றுசூழல் பாதிப்பினைச் சந்திக்கலாம்.

இந்தியாவில் தமிழ்நாட்டில் 1983-ல் வறட்சியின் காரணமாக செயற்கை மழை பெய்விக்க முயற்சிக்கப்பட்டது. 2003, 2004 ஆண்டுகளில் கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் ஆந்திர மாநிலங்களில் செயற்கை மழை முயற்சிகள் எடுக்கப்பட்டன.

# ''நியூஸ்வியூ'' நிறுவன ஊடக கற்கை மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு
















ஒரு வருட ஊடகவியல் துறை கற்றைநெறியைப் பூர்த்தி செய்த 20 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் ஞாயிற்றுக்கிழமை (24ம்திகதி) கண்டி "மகாவலி ரீச்"(Mahaveli Reach) ஹோட்டலில் "நியூஸ் வியூ" (Newsveiw) தலைவர் இர்பான் காதர் தலைமையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதீதியாக பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறையின் தலைவர் பேராசிரியர் விஜயச்சந்திரன், விஷேட அதிதியாக பேராதனைப் பல்கலைக்கழக மெய்யியல், உளவியல் துறையின் தலைவர் பேராசிரியர் அனஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள். மூத்த ஊடகவியலாளர்கள் சிலரும் அதிதீகளாக கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சிநெறியின் வள வாளர்களான "றொய்டர்" நிறுவனத்தின் ஷிஹார் அனீஸ், செய்தியாளர் சீவகன் பூபாலரட்ணம், விடிவெள்ளி பத்திரிகை ஆசிரியர் பைரோஸ், டெய்லி மிரர் பத்திரிகையின் ஆசிரியர் மற்றும் ஆலோசரகர் அய்யூப், பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முக்கிய உறுப்பினர் அமீர் ஹுசைன் ஆகியோரும் அங்கு கௌரவிக்கப்பட்டனர். பயிற்சிபெற்று வெளியேறியவர்கள் இத்துறையில் தொடர்ந்து பங்களிப்புச் செய்யவும் பிராந்தியத்தின் மக்கள் தேவைகளை பேசுவதற்காக thekandytimes.lk என்ற பெயரியல் தனித்துவமான இணையதளம் ஆரம்பித்துத்து வைக்கப்பட்டது.

**யாஹியா ரிக்காஸ் அஹமட்**

அமெரிக்க தூதரகத்தின் பூரண அனுசரணையில் நடாத்தப்பட்ட கற்கைநெறியை அக்குரணை "நியூஸ் வியூ" பத்திரிகை பூரண ஒருங்கிணைப்பு, மேற்பார்வை செய்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.



NELSON COLLEGE LONDON

NCL
NELSON COLLEGE LONDON

# Now Enrolling

Are you 18+
CALL US

Business Course:
0208 514 0033

Hospitality Management
0203 500 0239



## Why Us

We provide:

- One to One support
- Flexible Timetable
- National and international course-based events & tours
- Employer introduction
- Job placement

## Courses

- HND Business
- HND Hospitality Management

- BA (Hons) Top Up in Business
- BA (Hons) Top Up in Hospitality Management

FIND OUT MORE
www.nelsoncollege.ac.uk

EMAIL US
info@nelsoncollege.ac.uk

IN PARTNERSHIP WITH

LONDON METROPOLITAN UNIVERSITY

Pearson

# திரௌபதை அம்மன் கோயில் ஆண்டுச்சடங்கின் போது சடங்கோடு இயைய நடத்தப்படும் பாரதச் சடங்கு

## வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும் 21

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---



இறுதி நாட் பெரும் காட்சியாக நடத்தப்படுகின்றது. காளி, மாரி, வைரவர் எனச் சிறு தெய்வங்கள் தெய்வமாடுவோர் மீது முற்படும்.


அத்தோடு திரௌபதி, பஞ்சபாண்டவர்கள் தெய்வங்களும் முற்படும். இத்தெய்வம் ஏறி ஆடுவோர் தம்மைப் பஞ்சபாண்டவர் போலவும், திரௌபதி போலவும் பாவித்து பாரதக் கதையின் சில பகுதிகளைக் கோயிற் சடங்கின்போது நிகழ்த்துவர். 'பஞ்சபாண்டவர் வனவாசம் செல்லுதல்', 'அர்ச்சுனன் தவஞ் செய்யச் செல்லுதல், 'அரவானைக் களப்பலி கூட்டுதல் ஆகியன இவர்கள் நிகழ்த்தும் சடங்குகளாகும்.

இத் திரௌபதி அம்மன் கோயிற் சடங்குமுறை, நாம் முன்னர் பார்த்த சிறு தெய்வக் கோயிற் சடங்கு முறைகளின்று நாடக அமிசத்தில் சற்று வளர்ச்சியடைந்த நிலையிற் காணப்படுகிறது எனலாம். பாண்டிருப்பில் உள்ள திரௌபதை அம்மன் கோயிலே இவற்றுட் புராதன கோயிலாகவும், சிறப்பு மிக்க கோயிலாகவும் கருதப்படுகிறது. அங்கு நடைபெறும் சடங்கு நடைமுறையினைக் கொண்டு இதன் தன்மைகள் கீழே விளக்கப்பட்டுள்ளன. திரௌபதி அம்மன் கோயில் பாண்டிருப்பில் அமைந்திருப்பினும் சூழவுள்ள ஊர்க்கோயில்கள், வீதிகள், சந்திகள் எங்கும் நடைபெறும். ஒரு குறிப்பிட்ட ஊரவர் மாத்திரமன்றி, சகல ஊரவர்களும் பங்குகொள்ளும் நிகழ்ச்சியாக இது நடைபெறுகிறது.

திரௌபதி அம்மன் கோயிலில் மொத்தமாக 18 சடங்குகள் நடைபெறுகின்றன. 1ஆம் சடங்கு தொடக்கம் 6ஆம் சடங்குவரை வழமை போலப் பூசைகள் நடைபெறுகின்றன. 7ஆம் சடங்கன்று அருகிலுள்ள மாணிக்கப்பிள்ளையார் கோயிலில் இருந்து நாராயணன் சிலை கொண்டு வரப்படுகிறது. 8, 9, 10, 11 ஆம் சடங்குகள் பின்னர் வழமைபோல் நடைபெறுகின்றன. 12ஆம் சடங்கன்று கலியாணக்கால் வெட்டுதல் என்னும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. கொஸ்தாவர் வளவிலிருந்து பூவரசு மரம் வெட்டி வந்து திரௌபதி அம்மன் கோயிலுக்குள் வைத்து அதைச் சுற்றிச் சேலை கொய்து மறைத்து வைப்பர்.* (திரௌபதியைத் துகிலுரிந்தபோது நாராயணன் இருந்த இடம் அது என்று நம்பப்படுகிறது). பின்னர் 13, 14, 15ஆம் சடங்குகள் வழமை போல நடைபெற்று 16ஆம் சடங்கு பாரதக்கதையை நடிக்கும் வகையில் ஆரம்பமாகிறது.

16ஆம் சடங்கன்று வனவாசம் ஆரம்பமாகின்றது.

துரியோதனனுடன் சூதாடித் தோற்று பஞ்சபாண்டவர் ஐவரும், திரௌபதியும் வனவாசம் செல்வது போன்ற காட்சி அன்று அபிநயிக்கப்படுகின்றது. பஞ்சபாண்டவருக்கும், திரௌபதிக்கும் ஆறுபேர் உருவேறி ஆட அவர்களை உண்மையான பாண்டவர்களாகவும், திரௌபதியாகவும் நினைத்து மக்கள் பூஜிப்பர். திரௌபதி அம்மன் கோயிலை அத்தினாபுரியாக வைத்து அதினின்று வெளிப்பட்டு மணற்சேலை, நற்பிட்டி




முனை, சேனைக்குடியிருப்பு ஆகிய கிராமங்களுக்குச் சென்று திரும்புதல் வனவாசம் சென்று திரும்புதலாக அபிநயிக்கப்படுகிறது. இச் சடங்கு தொடங்குமன்று தருமருக்கு உருவேறி ஆடுபவர் பாண்டிருப்பிலுள்ள சந்தியில் (வாள் மாற்றும் சந்தி) அமர்ந்திருப்பார். அப்போது வீமனுக்கு ஆடுபவர் அவரை மூன்றுதரம் வளைத்து ஆடி வணங்கி நிற்பார். தருமர் அவரிடம் கையில் ஒரு வாளைக் கொடுப்பார். அவர் அந்த வாளை எடுத்துக் கொண்டு சென்று பக்கத்திலுள்ள ஆட்களின் வளவுகளுக்குட் புகுந்து அங்கு காணப்படும் காய், கனிகளை வெட்டிக் கொண்டு வருவார். வீமனின் பின்னாற் செல்லுபவர்கள் அவற்றைச் சுமந்து வருவர். அவையாவும் கோயிலுக்கே சேரும். வனவாச காலத்தில் காட்டில் வீமசேனன் பாண்டவருக்கு காய், கனி தேடிக் கொடுத் தமையை அபிநயிப்பதை இங்கு அவதானிக்கலாம்.

பின்னர் அங்கிருந்து வெளிக்கிட்டு பாண்டவர்களும் திரௌபதியும், பூசாரியாரும், பின்தொடர்வோரும் உடுக்கடித்துப் பாடியபடி அருகிலுள்ள வெள்ளரசம்மன் கோயிலுக்குப் போவார்கள். பின்னர் மணற் சேனைக்கு வந்து மண்டபத்தடியிற் சிலநேரம் தங்கியிருப்பர். அதன் பின் நற்பிட்டிமுனை கந்தசுவாமி கோயிலுக்குச் செல்வர். பின் பிள்ளையார் கோயிலுக்கு வருவர். அங்கு வண்ணான் விரித்த வெள்ளையில் பாண்டவரும், திரௌபதியும் இருக்க, பூசாரிமார் பிள்ளையாருக்குப் பூசை நடத்துவர். பாண்டவர்களும் பிள்ளையாரை வணங்கிவிட்டு சேனைக்குடியிருப்பிலுள்ள மாரி அம்மன் கோயிலுக்குச் சென்றுகும்பிட்டு, சேனைக்குடியிருப்பு விஷ்ணு கோயில், காளிகோயில் செல்வர். அங்கு காளி கோயிலில் காளி, வைரவர் ஆகிய தெய்வங்கள் முற்பட்டு ஆடும்.

பின்னர் அங்கிருந்து வெளிக்கிட்டு வரும் வழியில் ஒரிடத்தில் துரியோதனன் இடம் என்றோர் இடமுண்டு. அப்பக்கத்தால் வருகையில் மேளதாளம் உடுக்கு, பாடல், ஒலிக்காது மௌனமாக வருவர்? கடைசியிற் பாண்டிருப்பின் பெரியகுளக் கட்டில் ஏறுவர். ஏறியதும் பழையபடி மேள, உடுக்கு ஒலி எழுப்பப்படும். அங்கு மக்கள் பாணக்கம் கரைத்து வைத்திருப்பர். அதைக்குடித்து மீண்டும் மாணிக்கப் பிள்ளையார் கோயிலுக்கு வந்து அவரைக் கும்பிட்டுப் பழையபடி திரௌபதை அம்மன் கோயிலுக்கு வருவர்

(தொடரும்)

---

# இலங்கையில் செயற்கை மழை பொழிவதற்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட முயற்சி வெற்றியளித்துள்ளது

மலையகத்தின் மவுஸ்ஸாகலை நீர்த்தேகக்க பகுதிகளில் சில நாட்களுக்கு முன்னதாக ஒரு நாள் காலை 11 மணியளவில் இரசாயணப் பதார்த்தம் இலங்கை விமானப்படையின் Y-12 ரக விமானம் மூலம் தூவப்பட்டது.

இதையடுத்து பகல் 01.00 மணி முதல் 01.45 மணி வரை சுமார் 45 நிமிடங்கள் மழை பெய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதையடுத்து எதிர்வரும் தினங்களிலும் காசல்ரீ மற்றும் மவுஸ்ஸாகலை நீர்த்தேகக்க பகுதிகளில் வான்பரப்பில் செயற்கை மழையை பொழிய வைப்பதற்காக இரசாயனப் பதார்த்தம் தூவுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

செயற்கை மழை என்பது மேகங்களின் மீது வெளிப்புறத் துகள்களைத் தூவி மழையை பொழிய வைப்பது ஆகும். இச்செயல்பாடானது மேகவிதைப்பு என்றழைக்கப்படுகிறது.

உலர் பனிக்கட்டி எனப்படும் திண்ம கார்பன்-டை-ஆக்ஸைடு, வெள்ளி அயோடைடு, சாதரண உப்பான சோடியம்



குளோரைடு, திரவ புரப்பேன் போன்றவை வெளிப்புறத் துகள்களாக மேகங்களின் மீது தூவப்படுகின்றன.

வெளிப்புறத் துகள்களை தூவுவதற்கு வானூர்திகள், ராக்கெட்டுகள் ஆகியன பயன்படுத்தப்படுகின்றன.

செயற்கை மழையை பெய்விக்கும் முறையானது ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இயற்கை மழையானது பொய்க்கும் போது செயற்கை மழை ஒரு வரப்பிரசாதம்.
செயற்கை மழை முறையில் சில சமயங்களில் மழை வேண்டிய இடத்தை விட்டுவிட்டு வேறு இடங்களில் பெய்வதும் உண்டு. இம்மழைப் பொழிவானது சில நேரங்களில் அதிக வெள்ளப் பெருக்கை குறைந்த நேரத்தில் உருவாக்கிடுவதும் உண்டு.

செயற்கை மழையின் அளவானது இயற்கை மழையின் அளவினைவிட சற்று

ஜோன்சன் லீமா

பெரிதாக இருக்கும். உலக நாடுகளில் சீனா அதிகளவு செயற்கை மழையை பெய்ய வைத்திருக்கிறது.

### செயற்கை மழையின் வரலாறு

செயற்கை மழையை உருவாக்குவதில் ஸ்ஷேபர், பெர்னார்டு, வென்னிகாட் ஆகியோர் செயற்கை மழை உருவாக்கத்திற்கான அடிப்படை காரணிகளை உருவாக்கினர்.

காமன்வெல்த் அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி அமைப்பால் 1947 முதல் 1960 வரையிலும் செயற்கை மழைக்கான முயற்சிகள் ஆஸ்திரேலியாவில் நடத்தப்பட்டன.

1960-ல் ஸ்னோய்மவுண்ட்டில் நடத்தப்பட்ட செயற்கை மழை சோதனையில் கணிசமான மழை பெய்ததாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. செயற்கை மழைக்கான அடிப்படை காரணிகளில் பல உறுதியான மாற்றங்களை அமெரிக்க விஞ்ஞானி சிம்சன் செய்தார். நவீன மாறுதல்களை சீன நிபுணர் சாங் சியாங் குழுவினர் செய்தனர்.

### செயற்கை மழை உருவாகும் விதம்

செயற்கை மழை உருவாக்கத்தில் மூன்று நிலைகள் உள்ளன. அவை
1. காற்றழுத்தத்தை உருவாக்குதல்
2. மழை மேகங்களைத் திரட்டுதல்
3. மழை மேகங்களை குளிரச்செய்தல்
காற்றழுத்தத்தை உருவாக்குதல்

எந்த இடத்தில் மழையை உண்டாக்க விரும்புகிறோமோ அந்த இடத்தில் முதலில் காற்றழுத்தத்தை உருவாக்க வேண்டும்.

காற்றழுத்தத்தை ஏற்படுத்த முதலில் கால்சியம் ஆக்ஸைடு, கால்சியம் கார்பைட், யூரியாவும் அம்மோனியம் நைட்ரேட்டும் கலந்த கலவை, உப்பும் யூரியாவும் கலந்த கலவை போன்றவற்றை மேகங்களின் மீது கனரக துப்பாக்கிகள், பீரங்கிகள் மூலமாகவும், வானூர்திகள் மூலமாகவும் தூவுகின்றனர்.

இந்த வேதிப்பொருட்கள் வானிலையில் உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சுகின்றன. இதனால் அவ்விடத்தில் காற்றழுத்த தாழ்வுநிலை ஏற்படுகிறது. காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக மழைமேகங்கள் உருவாகுகின்றன.

தொடர்ச்சி... (பக்கம் -07)

# மட்டக்களப்பின் முதல் தலபுராணம்

## ஒரு பார்வையும் பதிவும் -பகுதி 1

சந்திரசேகரன் மணிசேகரன்

மட்டக்களப்பின் முதல் தல புராணம் தேசத்து கோவில்களில் ஒன்றான சித்தாண்டி மீது இலக்கியமணி நல். அழகேச முதலியாரால் பாடப்பட்ட சித்தாண்டி தல புராணம் ஆகும்.

இது பல்வேறு அறிஞர்களினதும் ஊர் பொதுமக்களினதும் அங்கீகாரத்துடனேயே நூல் வடிவம் பெற்றது என்பது கவனம் கொள்ளத்தக்கது. இன்று ஊர்பற்றியும் ஆலயங்கள் பற்றியும் வரலாறுகளை எழுதிவிட்டு, கண்டனங்களையும் மறுப்பையும் எதிர்கொள்வதுடன் நீதிமன்றப் படிகளில் ஏறி இறங்குவோரும் கவனம் கொள்ளவேண்டிய மிக முக்கியமான விடயமாகும்.

ஒன்று.
தலபுராணம் பற்றி உரைத்தவர்கள்

இத்தலபுராணச் சிறப்புப் பற்றி பல தமிழ் அறிஞர்களும் வித்துவான்களும் இந்நூலிலேயே கூறியுள்ளார்கள். இவ்வாறு எட்டுப்பேரின் கருத்துக்கள் பாவிலும் உரை நடையிலும் காணப்படுகின்றன.

நூலாசிரியரின் குருவுமான புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் சிறப்புப்பாயிரம் எழுசீர் விருத்தமாக இடம்பெற்றுள்ளது. இதில் சித்தாண்டி முருகன்தலத்தின் சிறப்பையும், அதற்கு தலபுராணம் இல்லாத குறையையும், அதனை நிவர்த்திக்கவந்த நூலாசிரியரின் குருபக்தி, சமயபக்தி, ஒழுக்கசீலம் என்று ஆசிரியரின் பண்பையும் சிறப்பையும் கூறுகின்றார்.

அடுத்து, தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகன் சோ. நடராசாவின் சிறப்புப்பாயிரமும் இடம்பெற்று சிறப்பு சேர்க்கிறது.

மட்டக்களப்பு வித்துவான் திரு. ந. நாகலிங்கம் அவர்களின் அணிந்துரையும் இடம்பெற்றுள்ளது.

இதில், "கிழக்கு மாகாணத்திலுள்ள முருகன் ஆலயங்களுள் பழமையும் வளமும் புதுமைத்தோற்றமும் கொண்டது இவ்வாலயம். இவ்வாலயத்திற்கு இற்றைவரையும் ஒரு தலபுராணம் இல்லாமை பெரிதும் குறையாகவிருந்தது, அக்குறையையகற்ற அக்குமாரக் கடவுளே ஆசிரியர் ஒருவரை தந்துள்ளாரெனில் மிகையாகாது. முருகப்பெருமானை குலதெய்வமாகக் கொண்ட நவவீரர் பரம்பரையில் வழிவந்த செங்குந்த மரபிலுதித்த உயர்திரு. நல். அளகேச முதலியார் ஆரையம்பதியை பிறப்பிடமாகக் கொண்டவர்."

"சிற்றறிவுடையோரும் கற்றுணரக்கூடிய முறையிலும், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் வகையிலும் ஆசிரியர் ஏனைய தலபுராண ஆசிரியர்களையும் வென்றுள்ளார்."

"இந்நூல் தலபுராணமெனிலும் ஒவ்வொரு தமிழ் மகனும் சைவ சமயியும் கற்றுணர வேண்டிய செய்திகள் பலவுண்டு." யாழ். நல்லூர் ஆயுள்வேத வைத்தியரும் பண்டிதருமான திரு. ச. இராமச்சந்திரன்(வெள்ளை அண்ணன்) அவர்களின் வாழ்த்துப்பாவும் இடம்பெற்றுள்ளது.

ஓய்வு பெற்ற தலைமையாசிரியரும் ஆரையம்பதி திருநீலகண்ட வினாயகராலய பரிபாலனசபைத் தலைவரும் சைவத்திருமுறை அறிஞருமான திரு. ஞா. செல்வநாயகம் அவர்களின் மதிப்புரை.

"இது மட்டுக்களப்பு ஆரையம்பதி வாசகரும் உபசுப்ரமணியச் சிவமரபினரும் வரகவியுமான திரு.ந.அழகேசமுதலியார் அவர்களால் பாடப்பட்ட 250 விருத்தப் பாடல்களைக் கொண்டது. படிப்போரும் கேட்போரும் மெய்மறந்து பரவசமடையும் பாங்குடைய சொல்நயமும் பொருள் நயமும் ஒருங்கமையப்பெற்றது. இப் புராணத்தின் பல அம்சங்கள் ஆணித்தரமானவை."

இறுதி வரி மிக முக்கியமானது, பிற்காலத்தில் நீதிமன்ற வழக்கொன்றிற்காக இந்நூல் சாட்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ள வரலாறும் உண்டு.

ஓய்வுபெற்ற அரச வைத்தியரும் ஈழத்து காளமேகம் எனப்போற்றப்பட்டவருமான புலவர் திரு.சிவ.சோமசுந்தரம் அவர்களது சிறப்பு வாழ்த்தும் உண்டு.

நேரிசையாசிரியப்பாவில் சிறிசித்திர வேலாயுதசுவாமி கோவில் தேவஸ்தானசபைத் தலைவர் திரு.ச.சண்முக வன்னிமையின் ஆசியுரையில், "இத்தகைய நற்பண்புகள் அமைந்த உத்தமர் பாடிய சித்தாண்டித் தல புராணமென்னும் நூல் இங்கு நிகழ்ந்த பழைய உண்மைச் சரித்திரங்களை விளக்குவனவாகும்." என்கிறார்.

மட்டக்களப்பு சைவப்புலவர் சங்கத் தலைவர் பண்டிதர் திரு. த. கிருஸ்ணபிள்ளை பதினான்கு சீராசிரிய விருத்தப்பாவில் முருகன் பிறப்பு, சித்தாண்டி சிறப்பு, தமிழ்த்தாய் காவியம் தந்த தனது நண்பனின் என்றுரைக்கின்றார்.



இவ்வாறு எட்டு அறிஞர் பெருமக்கள் நூலாசிரியரின் தமிழாளுமை, தலபுராணம் பற்றிய முக்கியமான முன்னீடுகளைத் தந்துள்ளனர்.


இரண்டு.
நூல் பிறந்த கதை.

இவைகளைத் தொடர்ந்து நூலாசிரியர் தந்த நீண்டதொரு முன்னுரை இந்நூலுக்கு வலுச்சேர்க்கிறது. இதுவே மிகச் சிறப்பு, பொதுவாக தலபுராணங்களுக்கு சான்றுகளாக செப்பேடுகள், சுவடிகள், கர்ணபரம்பரைக் கதைகள் கொள்ளப்படும். இவ்வகையில், தான் 1935ம் ஆண்டு கனக சாமியார் எனும் பெரியாரிடம் ஓர் ஓலைச் சுவடி இருந்து, அதனை பார்வையிட்டதாகவும், இந்தியாவிலிருந்து சிகண்டி முனி வந்து, 2ம் இராசசிங்கனால் உபசரிக்கப்பட்டதாகவும், வரும் வழியில் ஆதிக் குடிகளான வேடுவர்களை கண்டதாகவும், அவர்களில் பெரிய கழுவன், சின்னக் கழுவன் என்போர் உபசரித்ததாகவும், இதனால் மகிழ்ச்சியடைந்த முனிவர் இறுதிக்காலங்களை அங்கே கழிக்க விரும்பி அத்திமரத்தடியில் ஒரு பர்ணசாலை அமைத்து, தான் கொண்டு வந்த கரும் பொன்னாற் செய்யப்பட்ட வேலை வைத்து வழிபட்டு அப்பதியிலேயே சமாதி அடைந்ததாகவும், கூறப்பட்டிருந்தது.

இதுபற்றி, நூலாசிரியர் பல கட்டுரைகளை பத்திரிகைகளில் எழுதி, பின் இக்குறிப்புக்களைக் கொண்டு தலபுராணத்தைப் பாடியதாகவும் கூறியுள்ளார்.

திரு. சோ. நடராசன் வீடு தேடி நேரில் வந்து என் கவிதைகளையும் கவித்துவத்தையும் பார்வையிட்டு, வாழ்த்தி, ஆலயங்களைப்பற்றி சரித்திர புராணங்கள் வந்துகொண்டிருக்கும் இவ்வேளையில், சித்தாண்டி முருகன் மீது ஈடுபாடு இருக்கும் நீ தலபுராணம் பாடலாமே என்று கூறியதால், அன்றிலிருந்து பாடத் தொடங்கியதாகவும் கூறும் நூலாசிரியர். தான் எழுதிய கையெழுத்துப் பிரதியை தனது அண்ணன் முறையான கவிராஜ கேசரியும் பண்டிதருமான ஆ. சபாபதி பண்டிதரிடமும், தனது மைத்துனரும் மதுரை தமிழ்ச்சங்க பண்டிதரும் நொத்தாரிசுமான க. சந்திரசேகரி இடமும், மைத்துனரான தலைமையாசிரியர் தமிழ்மணி சிவ. விவேகானந்த முதலியாரிடமும் கொடுக்க, இம்மூவரும் தனித்தனியே பார்வையிட்டு திருத்தங்களைச் செய்து உதவிருக்கிறார்கள்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய இந்நூல் கையெழுத்துப் பிரதியாகவே பல மாதங்கள் இருந்த வேளை, சித்தாண்டியை சேர்ந்த வைத்தியர் செ.




கிருஷ்ண பிள்ளையிடம் தெரிவிக்கவே, அவர் கையெழுத்துப் பிரதியைப் படித்து மகிழ்ச்சியுற்று, ஊர்மக்கள் சேர்ந்து இந்நூலை அச்சிட்டுத் தருவதாகக் கூறி 1973/09/09 திகதி ஞாயிற்றுக்கிழமை ஆலய வெளிவீதியில் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு, அதில் நூல் பொது மக்களுக்கு வாசித்துக் காட்டப்பட்டு, பொதுமக்களின் அங்கீகாரம் பெறப்பட்டது.

பலரும் பாராட்டிப் பேசினார்கள், பி.சிவலிங்கம் ஆசிரியர், ப.மயில்வாகனம், கி.பூபாலபிள்ளை, சீ.கணபதிப்பிள்ளை ஆசிரியர், பி.முத்துப்பிள்ளை ஆசிரியர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அத்துடன் சித்தாண்டி வாணி கலா மன்றம், கிராம முன்னேற்றச் சங்கம், சனசமுக நிலையம் இவைகளைச் சேர்ந்த வாலிபர்களும் முக்கியமானவர்கள், என்கிறார் நூலாசிரியர்.

இங்கு கவனம் கொள்ள வேண்டிய முக்கியமான சில விடயங்கள் உண்டு. அச்சில் வர முதலே அங்கீகாரம் பெறப்பட்ட முறை.

#தமிழில் துறைபோன எட்டு அறிஞர் பெருமக்களின் கருத்துத்துரைகள்.

#சித்தாண்டி ஊர் பொதுமக்களின் அங்கீகாரம்.
#ஊரிலுள்ள குறிப்பிடத்தக்க புத்திஜீவிகளின் அபிப்பிராயம்.

#ஊரில் செயற்பட்டுக்கொண்டிருந்த முக்கிய பொது அமைப்புக்களின் கருத்துக்கள்.

#ஊர் இளைஞர்களின் அபிப்பிராயங்கள்.

#நூலாசிரியரின் உறவினர்களான மூன்று தமிழ் அறிஞர்களின் திருத்தமும் அங்கீகாரமும் பெற்றது. எழுமாறாக இத்தலபுராணம் பாடப்படவில்லை என்பதற்கு இவைகளே சாட்சி. இன்று ஊர் பற்றி, சமுகம் பற்றி, ஆலயங்கள் பற்றி படைப்புக்களை வெளியிடுவோருக்கான வழிகாட்டி இந்நூல். இதனைப் பின்பற்றினால், பிற்காலத்தில் ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் கேட்க வேண்டியதில்லை. நீதிமன்றங்கள் ஏறி இறங்க வேண்டியதில்லை.

(தொடரும்)

# காதலுக்கு வகை தொகை இல்லை

## இதுவும் இலக்கியமே!

சஞ்சயன் செல்லமாணிக்கம்



யூதர்களுக்கான யேரூசலேம் பகுதியிலுள்ள ஒரு உணவகத்தில் உட்கார்ந்திருக்கிறேன்.

சமையல்காரருக்கும் எனக்கும் இடையில் உள்ள தூரம் 40 செண்டிமீட்டர் மட்டுமே.

அவர் என்ன செய்கிறார் என்பது எனக்கு அப்பட்டமாகத் தெரிகிறது. அடுப்பின் வெக்கையை உணரமுடிகிறது.

தனது காதலியை முதன்முதலாகத் தொடுவது போன்றான கவனமான உணர்வுடன் எனக்கான உணவைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார் அவர்.

காதலியின் மகிழ்ச்சியே தனக்கான முக்தி என்பது போன்ற கவனம் அவரின் முகத்தில் தெரிகிறது.

காதலியை நீராட்டுவதுபோன்ற உணர்வுடன் மரக்கறிகளுடன் உரையாடியபடியே அவற்றைக் கழுவுகிறார்.

கண்களில், அவளின் அந்தரங்கங்களை இதுவரை காணாததுபோன்ற மோகத்தைக் காண்கிறேன்.

அவளைக் கிளர்சியூட்டுவது போன்று ஆட்டிறைச்சியை ஆட்காட்டி விரலால் வருடியபடியே மெதுவாக வாட்டுகிறார்.

அவரது வருடலின் வெம்மை பொறுக்காத அவள் சிலிர்க்கிறாள்.

இவன் மேலும் மேலும் வாசனைப்பொருட்களிட்டு அவளின் தாபத்திற்கு தூபமிடுகிறார்.

இவரது தொடுகையின் வெம்மை பொறுக்காத அவள் தணலின்மேல் வேர்த்து வில்லாய் வளைகிறாள்.

தனது தொடுகையில் உன்மத்தமுற்று திருப்தியடைந்த அவளின் சிலிர்ப்பில் தன்னை அவன் இழந்துபோவது போன்று அவன் மந்தகாசமாய் புன்னகைக்கிறான்.

இதுவரை ஒருத்தரையும் அவர் காதலிக்கவில்லை போன்றேயிருக்கிறது அவளின் மீதான அவரின் கவனம்.

பாவம் அவர்.

# பெண்ணுக்குப் பத்தியம்

பெண்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரும் கொடுமைகளில் ஒன்று பத்தியச் சாப்பாடு.

பூப்படைந்தாலும் பத்தியம், பிள்ளை பிறந்தாலும் பத்தியம்.

வேப்பிலையை அரைத்துக்கொடுத்தல், நல்லெண்ணெயை குடிக்கக் கொடுத்தல் போன்ற கொடுமைகள் ஒரு பக்கம், பிடித்த சாப்பாட்டைக் கொடுக்காமல் விடுதல் இன்னொருபக்கம் என இந்த கொடுமையின் லிஸ்ட் பெரிது.

இதற்கும் விஞ்ஞான விளக்கம் என்ற பெயரில், நம் முன்னோர்கள் என்ன முட்டாள்களா என்று சொல்லிக்கொண்டு ஒரு கூட்டம் கிளம்பும்.

இந்த விஞ்ஞான விளக்கமெல்லாம், ஐயப்பன் கோயிலுக்குப் பெண்களை விடாமல் தடுக்க சொல்லப்படும், நாசாவே வியக்கும் விளக்கங்கள் போன்றவைதான்.

உலகத்தில் இருக்கும் பெண்களெல்லாமென்ன பத்தியச் சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டா இருக்கிறார்கள்.

அவர்கள் பத்தியச்சாப்பாடு சாப்பிடும் நம் பெண்களைவிட எந்த வகையில் குறைந்துவிட்டார்கள்?

முள் இருக்கும் நெத்தலி மீன் சாப்பிட்டால், தாய்ப்பாலோடு முள் வருமென்று நம் முன்னோர்கள் சொன்னதாக நீங்கள் நம்பினால், முன்னோர்கள் முட்டாளா என்றெல்லாம் தெரியாது, ஆனால் நீங்க வடிகட்டின முட்டாள்.



அம்மா கத்தரிக்காய் சாப்பிட்டால், பிள்ளைக்கு கடி, சிரங்கு வருமென்பது, எவ்வளவு பெரிய பொய் என்று, அடிப்படை விஞ்ஞானத்தில் சமிபாட்டுத்தொகுதி படித்தவர்களுக்குத் தெரிந்திருக்கும்.

பூப்படைந்த பின்பும், குழந்தை பிறந்த பின்பும் விசேசமான சாப்பாடு எதுவும் தேவையில்லை.

கர்ப்பமாக இருக்கும்போதுகூட விசேடமாக எதுவும் தேவையில்லை.

செயற்கையான, பதப்படுத்தப்பட்ட உணவுகள், சோடாக்கள் போன்றவற்றை அதிகமாக சாப்பிடாமல் தவிர்ப்பது நல்லது. அதற்காக ஆசைக்கு எப்பவாவது சாப்பிட்டு விட்டு, விசம் சாப்பிட்ட மாதிரியெல்லாம் ஓவர் பில்டப் தேவையில்லை.

பிடித்த மீன், இறைச்சி போன்றவற்றை நீங்கள் தாராளமாக சாப்பிடலாம்.

நிறையப்பேர் என்னிடம் கேட்பது, சேர் ஏதாவது பால்மா எழுதித்தாங்க.

கர்ப்ப காலத்தில் கட்டாயம் விலைகூடிய பால்மா ஏதும் குடிக்க வேண்டுமென்ற மாயையை இந்த பால்மா கம்பனிகள் உருவாக்கியுள்ளன. அதெல்லாம் எதுவும் தேவையில்லை, எப்போதும்போல நீங்கள் குடிக்கும் பால்மாவோ, பசுப்பாலோ போதும்.

விலைகூடிய பால்மா வாங்கும் பணத்தில் 5 தரம் இறைச்சி வாங்கிச் சமைத்தால், பால்மாவை விட அதிகம் நன்மை.

மருத்துவர்
சிவஞானம் சிவச்சந்திரன்

யாராவது டொக்டர் விலைகூடிய ஒரு பால்மாவை எழுதி, குடிக்கச்சொல்லி கட்டாயப்படுத்தினால், நீங்க வேற ஒரு டொக்டரிடம் செல்வது நல்லது.

குழந்தை பிறந்தபின் சமைத்துக் கொடுக்கும் மசாலா கறி( மட்டக்களப்பில் மிளகுதண்ணி என்பார்கள்) சிலருக்குப் பிடிக்கும். பிடிப்பவர்கள் சாப்பிடலாம். ஆனால் பிடிக்காதவர்கள் அதைக் கஷ்டப்பட்டுச் சாப்பிடணுமென்றில்லை நீங்கள் வழமையாக சாப்பிடும் சோறு, கறியையே சாப்பிடலாம், எதுவும் நடந்துவிடாது.

சிலர் பிள்ளை பிறந்தபின் சாராயம் கொடுப்பார்கள். வலிக்கு மருந்து இல்லாத காலத்தில் சாராயம் கொஞ்சம் வலியைக் குறைத்திருக்கலாம். இப்போது வலி என்றால் இரண்டு பனடோலைப் போடுங்கள்.

கஷ்டப்பட்டு சாராயம் குடித்து வாந்தியெல்லாம் எடுக்கத்தேவையில்லை.

# 'உளியின் வலி பொறுக்கும் கற்களே அழகிய சிற்பங்கள் ஆகின்றன'

திருமதி.நீலாம்பரி ஜெயரூபன்
(BA.Dip in Music. PGDE. MED )
(மட்/பால்சேனை தமிழ்மகா வித்தியாலயம்

"அரங்க ஆசிரிய கழகம்" மஹாகவியின் புதியதொரு வீட்டினை 30.03.2019 அன்று பிற்பகல் 3,00 மணிக்கு கல்லடி உப்போடை விவேகானந்தா மகளிர் பாடசாலையில் மேடையிடுகிறது. இதில் நடிப்பவர்கள் அனைவரும் பாடசாலையில் நாடகம் அரங்கியல் பாடம் படிப்பிக்கும் ஆசிரிய ஆசிரியைகளே. இதைநெறியாள்கை செய்கிறார் சி,மௌனகுரு அவர்கள். உதவி நெறியாளர் நாடக ஆசிரிய ஆலோசகர் குணசீலன்.இலங்கைப் பரீட்சைத் திணைக்கள் ஆணையாளர் நாயகம் இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார்

'உலகம் ஒரு நாடக மேடை அதில் ஒவ்வொருவரும் ஒரு பாத்திரம்' என உலக நாடக ஆசிரியரான சேக்ஸ்பியர் கூறியிருக்கிறார். அந்த வகையில் அரங்கும், நடிப்பும் எம் பிறப்பு இறப்பிற்கு அப்பாற்பட்ட கலைஅம்சங்கள் ஆகின்றன.

கிழக்கில் பிறந்து அரங்கிற்காகப் பணி செய்யவென படைக்கப்பட்ட பலருள் சிலர் சேர்ந்து, எமது குருவான மதிப்பிற்கும் கௌரவத்திற்கும் எமது அன்பிற்கும் உரித்தான எங்கள் பிரதேசச் சொத்து பேராசிரியர் சி. மௌனகுருவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டதே எமது 'அரங்க ஆசிரியர் கழகமாகும்'.

இதற்கு ஆரம்பத்தில் 40இற்கும் அதிகமான ஆசிரியர்களின் பங்குபற்றுதல் இருந்தாலும் தற்போது 25 ஆசிரியர்களுடன் எமது பேராசிரியரும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

'உளியின் வலி பொறுக்கும் கற்களே அழகிய சிற்பங்கள் ஆகின்றன'.

பல இடர்களையும் சிக்கல்களையும் பொறுத்துச் சகித்து பலவற்றைத் தியாகம் செய்தே இவ் அரங்கக் கழகத்தில் ஆசிரியர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

எமது ஆசான் ஒவ்வொரு ஆசிரியரையும் சிற்பியாக இருந்து பல சிரமத்திற்கு மத்தியில் சிற்பங்களாக்கும் பணியில் முதற்படியாக மஹாகவி து.உருத்திரமூர்த்தி அவர்களால் எழுதப்பட்ட ' புதியதொரு வீடு' எனும் நாடகத்தை இவ்அரங்க ஆசிரியர்களை வைத்து நடிக்கச்செய்து மேடையேற்றுகின்றார்.

உண்மையான திறமைக்குமதிப்பளித்து தனது நேர்மையையும் இப்பணியில் நிரூபித்துள்ளார் எமது ஆசான்.

' புதியதொரு வீடு' எனும் நாடகம் பல தடவைகள் மேடையேற்றப்பட்டிருந்தாலும் ஆசிரியர்கள் இணைந்து நடிக்கப்படும், எமது ஆசானால் நெறியாள்கை செய்யப்படும் இந்நாடகச் செயற்பாடு கிழக்கின் நாடக ஆசிரியர் வரலாற்றுச் சுவட்டில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவை.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மிகச் சிறந்த ஆளுமைப் பண்புகளும் தனித்துவமான திறமைகளும் ஏராளமாய் புதைந்து கிடக்கின்றன.

மண்ணினுள் எவ்வகையில் வைரம், பொன், மாணிக்கம்... எனப் பல இருந்தாலும் அதனை அகழ்தெடுப்பதற்கும், பட்டை தீட்டுவதற்கும் காலம் , இடம், சந்தர்ப்பம், ஆள்பலம் எனப் பல தேவைப்படுகின்றன. இவைகள் இல்லாவிடில் அவற்றின் பெறுமதிகளை உலகம் அறிய மாட்டா. அவை மண்ணோடு மண்ணாக மூழ்கிக்கிடந்துவிடும்.

அதுபோலதான் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் பல திறமைகள் ஒளிந்து கிடக்கின்றன. அவற்றை வெளியில் எடுப்பதற்கும், புடம் போடுவதற்கும் சந்தர்ப்பமும் நேரமும் அவசியம்.

அவ்வாறுதான் ஒவ்வொரு ஆசிரியரிடமும் ஏன் ஒவ்வொரு மனிதனிடமும் உள்ள திறமைகள் ஆசிரியர்களால் வெளிக்கொணரப்படுகின்றன. அவ்வகையில் ஆசிரியர்களுள் மறைந்து கிடக்கும் திறன்களை பட்டை தீட்டி, புடம் போட்டு வெளிக்காட்டவும் எமது இளைய மாணவர் சமூதாயம் புத்தெழுச்சிபெறவும் எமது ஆசான் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் இப்பணியில் தம்மை அர்ப்பணித்து வருகின்றார்.

இவரின் இப்பணி பலரால் விமர்சனத்திற்கு உள்ளாகி இருந்தாலும் உண்மை என்ற ஒன்று உண்டு . அதுவே இவ்

தொடர்ச்சி... (பக்கம் -15)

# விளையாட்டு


## அரங்கம் தேடி வந்து மட்டுநகரின் கால்பந்தாட்ட வரலாற்று ஆவணங்கள் தந்த மூத்த கால்பந்தாட்ட வீரன் வைத்தியர் பிறேமா!

அரங்கம் செய்தி ஊடகம் கிழக்கிலங்கையின் முக்கியமான விடயங்களைக் கவனத்திற் கொண்டு தனது செய்திகளை வடிவமைத்து வருகின்றது. இந்த வகையில் விளையாட்டுத் துறையில் விசேடமாக கிழக்கிலங்கையின் கால்பந்தாட்ட வரலாற்றில் ஆரம்பமாக இயங்கியுள்ள மட்டுநகரின் கால்பந்தாட்டத்துறை குறித்து அதிக முக்கியத்துவம் கொடுத்து, தனது விளையாட்டுத்துறை சார்ந்த பக்கத்தை வெளியிட்டு வருகின்றது. இவ்வகையில் மட்டுநகரின் கால்பந்தாட்டத்திற்கு வளம் சேர்த்த வீரர்கள் குறித்து இப்பத்தியில் எழுதப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் அரங்கத்தின் இந்த விளையாட்டுப் பக்கத்தைப் பார்த்து பெருமைப்பட்ட மட்டுநகரின் மூத்த கால்பந்தாட்ட வீரரும் தற்போது வைத்தியராகவும் கடமையாற்றிக் கொண்டிருக்கின்ற பிறேமா எனச் சுருக்கமாக அழைக்கப்படும் திரு பிறேமதாசன் அவர்கள் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் "அரங்கம்" அலுவலகத்திற்கு வருகை தந்து அரங்கத்தின் விளையாட்டுப் பக்கம் குறித்த தனது பாராட்டுக்களைத் தெரிவித்ததுடன் அரங்கம் செய்தி ஊடகத்தின் பணிப்பாளர் திரு பூ.சீவகன் அவர்களுடன் உரையாடி மட்டக்களப்பு கால்பந்தாட்டச் சங்கத்தின் ஆரம்ப கால வரலாற்றை அறியத்தரும் ஆதாரங்கள் பலவற்றையும் வழங்கினார்.

அச்சந்தர்ப்பத்தில் இப்பத்தியை எழுதி வரும் என்னை அரங்கத்தின் ஆசிரியர் அழைத்திருந்தார். திரு பிறேமா அவர்கள் 1950 – 1975 வரையான ஆரம்பகால கால்பந்தாட்டச் சங்க ஆவணங்கள் பலவற்றை கொண்டு வந்திருந்தார். பல்வேறு இயற்கை, செயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்ட போதும் இவ்வாவணங்களைத்தான் பாதுகாத்து வந்ததாகவும் கூறினார்.

அப்போது திரு பூ.சீவகன் அவர்கள் அந்த ஆவணங்கள் அனைத்தும் தங்களிடமே இருக்கட்டும் நாங்கள் பிரதி எடுத்துக் கொள்கின்றோம் எனக்கூறி அவற்றை இலத்திரனியல் பிரதி எடுத்துக் கொண்டார்.


மட்டுநகர் வெபர் அரங்கம்

இந்த ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு மட்டுநகரின் கால்பந்தாட்ட வரலாற்றின் முக்கியமான பக்கங்கள் இப்பகுதியில் இனிவரும் வாரங்களில் பதிவாகவுள்ளன.



திரு.பிறேமா அவர்கள் மட்டுநகரின் புளியந்தீவில் பிறந்து வளர்ந்து 1975 களின் பின்னர் திருமண பந்தமூடாக மட்டக்களப்பின் பழந்தமிழ் ஊரான மண்டூரில் வாழ்வதற்காகச் சென்றவர்.

இவர் ஒரு சிறந்த கால்பந்தாட்ட வீரனாக 1960,70 களில் ஜொலித்துள்ளார். மட்டுநகர் பாடுமீன் கழகத்திற்காக ஆடிய இவர் கால்பந்தாட்டச் சங்கத்தின் நிருவாக நடவடிக்கைகளிலும் பல வருடங்கள் பணியாற்றியுள்ளார்.

குறிப்பாக 1970 களில் மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தின் பொருளாளராகக் கடமையாற்றியுள்ளார். இவர் பொருளாளராக செயற்பட்ட காலத்தில் கால்பந்தாட்டச் சங்கத்தின் வரலாற்றைப் பதிவு செய்யும் நோக்குடன் பல சிறப்பு மலர்களையும் வெளியிட்டுள்ளார். அக்காலத்தின் கால்பந்தாட்ட வரலாற்றை காட்டும் கறுப்பு வெள்ளை புகைப்படங்கள் பலவற்றையும் பாதுகாத்து வைத்துள்ளார்.

**து.கௌரீஸ்வரன்**

அச்சுப் பதிப்பு, பிரசுரத் தயாரிப்பு என்பன சாதாரணமாக மேற்கொள்ள முடியாத அக்காலத்தில் கால்பந்தாட்டச் சங்கத்தின் கடந்தகால வரலாற்றினையும், அக்கால நடவடிக்கைகளையும் ஆவணப்படுத்தும் நோக்குடன் இவர் மேற்கொண்ட முயற்சிகள் எம்மை வியக்க வைத்தன.

அத்தோடு இந்த ஆவணங்களைத் தன்னுடன் கூட எடுத்துச் சென்று பாதுகாத்து வைத்திருந்த தன்மையினை எண்ணும் போது அவர் மட்டுநகரின் கால்பந்தாட்டத்தை அதன் வரலாற்றை எவ்வளவு நேசித்து வாழ்கின்றார் என்பதை உணர முடிகின்றது.

மட்டுநகரின் மூத்த கால்பந்தாட்ட வீரனும் கால்பந்தாட்ட நிருவாகியுமான திரு. பிறேமா அவர்களுக்கு நன்றி கூறி, மட்டுநகரின் கால்பந்தாட்டம் குறித்து எழுதி வரும் அரங்கத்தைத் தேடி வந்த அவரின் பக்குவத்தையும் ஆக்கபூர்வமான மனப்பாங்கையும் வாழ்த்தி, அவர் வழங்கியுள்ள ஆவணங்கள் தரும் மட்டுநகரின் கால்பந்தாட்டம் குறித்த பல தகவல்களுடன் அடுத்த வாரம் சந்திப்போம்.

## யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் சங்க சிட்னி கிளையினரின் விளையாட்டு உபகரணங்கள்




(வவுணதீவு நிருபர் )

யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் சங்க சிட்னி கிளையுடன் மற்றைய கிளைகளும் இணைந்து மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்கு பெருந்தொகை விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்துள்ளனர்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட 31 பாடசாலைகளுக்கு இந்த விளையாட்டு உபகரணங்கள் கடந்த செவ்வாய்கிழமை (26ஆம் திகதி பிற்பகல் ) பகிர்ந்தளிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய உடற்கல்வி துறையின் உதவிப் பணிப்பாளர் எஸ். சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் சங்க சிட்னி கிளையின் தலைவர் சுப்பிரமணியம் சுபதாசன், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், உடற்கல்வி ஆலோசகர், ஆசிரியர்கள் மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது வசதி குறைந்த 31 பாடசாலைகளுக்கு சுமார் 16 இலட்சம் பெறுமதிமிக்க பாடசாலை விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

## கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி கிண்ண இறுதிப்போட்டி



கிழக்கு மாகாண கட்டளைத்தளபதி சவால் கிண்ண கால்பந்து இறுதிப் போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த 10.03.2019 திகதி மட்டக்களப்பு, காத்தான்குடி, அம்பாறை, கல்குடா, ஓட்டமாவடி, கிண்ணியா, திருகோணமலை, அக்கரைப்பற்று ஆகிய உதைபந்தாட்ட சங்கங்களை உள்ளடக்கியதாக ஆரம்பிக்கப்பட்ட கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி சபால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் முதலாவது அரையிறுதிப்போட்டி காலை 8.30 மணிக்கு ஏறாவூர் அகமட் பரீட் மைதானத்தில் அம்பாறை உதைபந்தாட்ட அணிக்கும் கல்குடா உதைபந்தாட்ட அணிக்கும் இடையில் நடந்தது.

தொடர்ந்து இரண்டாவது அரையிறுதிப்போட்டி அன்றைய தினம் மாலை 3:30 மணிக்கு அதே மைதானத்தில் மட்டக்களப்பு உதைபந்தாட்ட அணிக்கும் கிண்ணியா உதைபந்தாட்ட அணிக்கும் இடையில் நடந்தது.

அதேவேளை இந்த சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி எதிர்வரும் 31.03.2019ம் திகதி மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் அம்பாறை உதைபந்தாட்ட அணிக்கும் மட்டக்களப்பு உதைபந்தாட்ட அணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

## டிவிசன் 1க்கு தரமுயர்த்தப்பட்ட இளந்தாரகை விளையாட்டுக் கழகம்

மட்டக்களப்பு ஏறாவூர் இளந்தாரகை கால்பந்து விளையாட்டுக் கழகம் டிவிசன் 1 க்கு தரமுயர்த்தப்பட்டுள்ளது. இதுவரை காலம் டிவிசன் 2 பிரிவில் விளையாடி வந்த இந்த அணியினர் இப்போது டிவிசன் 1க்கு இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.



இவர்களை மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்டச் சம்மேளனமும், எமது அரங்கம் நிறுவனமும் வாழ்த்துகின்றனர்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 29

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

இந்த வாரம், வினாத்தாள் I (தமிழ் I)இல் மூன்றாவது வினாவாக வரும் திருக்குறள் பற்றிய வினாவை நோக்குவோம். இது, மாதிரிவினா என்பதைக் கவனத்திற்கொள்க.

3. **பெரியாரைத் துணைக்கோடல்** என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டு, பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.

(அ) பெரியாரது இலக்கணமும் அவரைத் துணையாகக் கொள்ளலும்
(ஆ) பெரியாரைத் துணைக்கொள்வதன் சிறப்பு
(இ) பெரியாரைத் துணைக்கொள்ளாதவிடத்து ஏற்படும் குற்றம்

- பயிற்சிக்காக மேலுமொரு வினா தரப்பட்டுள்ளது.

3. **வலியறிதல்** என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டு, பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.

(அ) வலியின் பகுதியும் அவ்வலிமேற் செல்வார் எய்தும் பயனும்
(ஆ) தன் வலியறியாத இடத்து ஏற்படும் குற்றம்
(இ) மாற்றான் வலியும் அவனது துணைவலியும் அறியாத இடத்து ஏற்படும் இழுக்கு
(ஈ) வினை வலியறியாத இடத்து ஏற்படும் இழுக்கு
(உ) பொருள் வலியறிதல் சிறப்பு

# அறுபதென்றால் ஓய்வா?

- திரு. சிவலிங்கம் -

அரசாங்கப் பதவியிலே அறுபது வயதானால்
அப்படியே பைல்மூடி அனுப்பிடுவார் வீட்டுக்கு
அரங்கத்தில் ஆடியகால் அடுப்படிக்குள் ஆடுமென்று
எப்படிச் செப்பிடலாம் எதையெண்ணி வாழ்ந்திடலாம்
ஒருபொழுதா இருபொழுதா பலநூறு பொழுதோடி
ஓர்மமாய்ச் செய்தவேலை ஒவ்வொன்றாய் மறந்திடுமா
கருவோடு சேர்ந்தநல்ல உயிர்போல வேலையென்று
கண்ணாகப் பார்த்தாலும் கடைசியிலே வெறுங்கூடா?

காலையிலே கந்தோருக்குக் களிப்புடனே தான்சென்று
கடமையைச் செய்யமுதல் ஊர்ப்புதினம் தான்அறிந்து
மாலைவரை வெளியுலகத் தொடர்புகளைத் தான்மறந்து
மகிழ்வுடன் கடமைகளை மலைப்பாகத் தான்செய்து
வேலைசெய்த களைப்போடு வீடேகி இளைப்பாறி
வருடமுதல் செய்வேலை அறுபதிலே எல்லையென்றால்
பாலைவனம் போலமனம் ஆகாதோ தினம்தினம்?
பாரினிலே யாருணர்வார் என்போன்றோர் நல்லமனம்

ஆடிய காலென்றும் பாடிய வாய்இன்றும்
இடையிலே நின்றாலே நிம்மதியோ தான்போகும்
தேடிய வேலையிலே தினமகிழ்ச்சி கொண்டாலும்
தப்பாமல் அறுபதிலே அகத்துக்கே போகவரும்
மூடிய வாயோடும் மூடாத நினைவோடும்
முகட்டையே பார்த்துநிதம் பழகத்தான் வேண்டிவரும்
வாடிய நெஞ்சமுடன் பழங்கணக்குத் தான்பார்த்து
வாசலிலே தான்கிடந்து வருவதே இவ்வோய்வா?

# வாசித்துப்பார்!

- யூனா

வாசித்தால் வாழ்க்கை இனிக்கும்
வாழ்வதை மனமது ஏற்கும்
யோசித்தால் வாசிக்கச் சொல்லும்
யெளவனத்தில் வாசிக்காது மகனே
காசிக்காய் அலையும் மனத்தை
கவனமாய்ப் பாது காக்கும்
வாசிப்பாய் தினமும் நன்று
வாழ்வாய் சோம்பல் கொன்று..

# கற்போம்

## உயிர் அங்கிகளின் மூலக உள்ளடக்கம்


குணம் சவரிராஜா

02 தொடர்ச்சி...


49. அமினோவமிலங்களில் இருந்து ஒரு புரதம் தொகுக்கப்படும் முறையை விபரிக்க.

- புரதத்தொகுப்பின் முதல் படிநிலையாக இரண்டு அமினோவமிலங்கள் ஒன்றுடனொன்று சேர்க்கையடைகின்றன.
- இதன்போது ஒரு அமினோவமிலத்தின் அமினோக் கூட்டத்துக்கும், மற்றைய அமினோவமிலத்தின் காபொட்சில் கூட்டத்துக்கும் இடையே தாக்கம் ஒன்று நடைபெறுகிறது.
- இத்தாக்கத்தில் நீர் மூலக்கூறொன்று அகற்றப்படுகிறது. இத்தாக்கம் நீரகற்றற்றொகுப்பு (Dehydration Synthesis) எனப்படும்.
- இதன் பெறுபேறாக ஒரு அமினோவமிலத்தின் அமைனோ கூட்ட Nக்கும், அடுத்த அமினோவமிலத்தின் காபொட்சில் கூட்ட Cக்கும் இடையே பெப்ரைட்டு பிணைப்பு எனப்படும் பங்கீட்டு வலுப்பிணைப்பொன்று தோன்றுகிறது.
- இத்தாக்கத்தின் விளைவாக ஒரு இருபெப்ரைட் (Dipeptide) உண்டாகிறது.
- தொடர்ந்து நடைபெறும் நீரகற்றற்றொகுப்புத் தாக்கங்களில் மேலும் பல அமினோ வமிலங்கள் பெப்ரைட்டுப் பிணைப்புக்களால் இணைக்கப்பட்டுகின்றன.
- இதன் பெறுபேறாக பல அமினோவமிலங்களைத் தொடராகக் கொண்ட பல்பெப்ரைட்டு (polypeptide) சங்கிலி ஒன்று தோற்றுவிக்கப்படுகிறது.
- தொகுக்கப்பட்ட புரதத்தினது அமினோவமிலங்களின் நீள் கோட்டுக்குரிய தொடர் அப்புரதத்தின் முதலான கட்டமைப்பு எனப்படும்.
- ஒரு புரதம் அமினோவமிலங்களால் ஆக்கப்பட்ட ஒன்று அல்லது பல பல்பெப்தைட்டுச் சங்கிலிகளால் ஆக்கப்பட்டிருக்கும்.

**அமினோவமிலங்களிலிருந்து புரதம் தொகுக்கப்படுதல்**




இரண்டு அமினோஅமில மூலக்கூறுகளுக்கிடையில் பெப்ரைட்டு பிணைப்பு எவ்வாறு உண்டாகிறது என்பதைக் காண்பிக்கும் வரிப்படங்கள்




பக்க அனுசரணை
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

அரங்கம் செய்திகள்
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
அரங்கம் பத்திரிகையில் விளம்பரம் செய்ய
சிறப்புத் தள்ளுபடி!
கால்பக்கம் - ரூபா 2500
அரைப்பக்கம் - ரூபா 5000
முழுப்பக்கம் - ரூபா 10,000
சிறுவிளம்பரங்கள் - ரூபா 200 மாத்திரமே

தொடர்ச்சி...

## கொழும்பில் கடத்தப்பட்ட பதினொரு தமிழர்கள்....

பெறப்பட்ட வாக்கு மூலங்களில் இருந்து கொலை செய்யப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவு கூறியுள்ளது. இந்த விசாரணை அறிக்கை இலங்கைக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சமூக கொள்ளை தொடர்பான விசாரணைப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வாவினால் நீதிமன்றத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி...

## கல்லடியில் ''மட்டு முயற்சியாண்மை கண்காட்சி - 2019 ''

இரவு 10 மணி வரை கண்காட்சியொன்று நடைபெறவுள்ளது
மாவட்ட அரச அதிபர் எம்.உதயகுமார் தலைமையில் நடைபெறும் இக்கண்காட்சியில் 14 பிரதேச பிரிவுகளிலும் உள்ள சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களின் தயாரிப்பு கைவினை பொருட்கள் , உணவு உற்பத்திகள் , பனையோலை, கைத்தறி உற்பத்தி பொருட்கள் , மட்பாண்ட உற்பத்திகள் , சிற்பங்கள் மற்றும் பாதணிகள் என பல்வேறு உற்பத்திப்பொருட்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட உள்ளதாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த் தெரிவித்தார்

மாவட்டத்தில் காணப்படுகின்ற சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை ஊக்குவிற்பதற்கும் அவர்களின் உற்பத்தி பொருட்களை விளம்பரப்படுத்துவதற்கும் எமது மாவட்டத்தின் வறிய மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் அவர்களுக்கான ஒரு சந்தைவாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கவும் இந்நிகழ்வு நடாத்தப்படுகின்றது

இந்தக் கண்காட்சியினூடாக மாவட்டத்தின் சிறிய நடுத்தர முயற்சியாளர்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்தவும் வறிய குடும்பங்களின் பொருளாதாரத்தை விருத்திசெய்யவும் தன்னிறைவான சமூக கட்டமைப்பை உருவாக்கவும் முயற்சிப்பதாக மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த் மேலும் தெரிவித்தார்

தொடர்ச்சி...

## 'உளியின் வலி பொறுக்கும் கற்களே...

அரங்கச் செயற்பாட்டின் முதற்படியும் இனிவரப்போகும் அதன் பணிகளும் ஆகும்.

இன்று 40 வயதைத் தாண்டிய பலரும் 25 வயதிற்கு மேற்பட்ட சிலரும் இப்பணிக்காக தம்மை அர்ப்பணித்துள்ளனர்.

எமது அரங்கச் செயற்பாட்டின் பெறுமதி உணர்ந்து இனிவரும் காலங்களில் பலர் இணைந்து கொள்வர் என நாம் நம்புகின்றோம். இப்பணி கிழக்கின் பாரம்பரியப் பண்பாடுகளை எமது இளைய சந்ததிக்கு ஒப்படைக்கும் பணியை இனிவரும் காலங்களில் செய்யும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எமது சுதேச படைப்புக்களும் எத்தனையோ மௌனகுருக்களும், சண்முகலிங்கங்களும் ,தார்சிசியஸ்சுகளும், வித்தியானந்தன்களும், கணபதிப்பிள்ளைகளும், இதனூடாக உருவாக வேண்டும் என்பது எமது அவா.

இக்கழகத்தை ஆரம்பித்துவைத்த பலருள் நானும் ஒரு ஆசிரியையாக இருக்கிறேன் என்பதிலும் எமது குருவின் படைப்பில் பிரதான பாத்திரத்தை ஏற்று நடிக்கிறேன்( மயிலி) என்பதிலும் பெருமை கொள்கின்றேன்.

எமது இப்பணிக்கு தமது முதுவயதிலும் எமக்காக அரும்பாடுபடும் ஆசானை நினைத்துப் பெருமை கொள்கின்றோம்.

அவர் கலைக்காக எமது கிழக்கிலங்கைக்கு கிடைத்த முத்து என்பதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறோம்.

அரங்கிற்கு ஒருஅப்துல்கலாமாக என்றும் எம் மனதில் அவர் காலங்காலமாக வாழ்ந்துகொண்டே இருக்கவும் அவரின் பணி தொடர்ந்துகொண்டே இருக்கவும் இறைவன் எமக்குத் துணை புரிய வேண்;டும்.

இன்று மேடையேற்றப்படுகின்ற' புதியதொரு வீடு' நாடகத்திற்கு பிரதம அதிதி, கௌரவ அதிதி, அழைப்பு அதிதிகளுக்கும் விசேடமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளருக்கும், உதவிப் பரீட்சை ஆணையாளருக்கும் எமது ஆசானுக்கும் எமக்கு சகல வழிகளிலும் உதவி புரிந்த அதிபர்கள், ஆசிரிய மாணவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

தொடர்ச்சி...

## தமிழ் மக்களும் கதாநாயக அரசியலும்

தேதிகளைக் குறித்ததைத் தவிர எதுவும் செய்யமுடியாமல் போய்விட்டது.

இப்போது தமிழர்களின் புதுக்கதாநாயகனாக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரும் வடமாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் உருவாக்கப்படுகின்றார். தமிழர்களின் துயர் நிறைந்த காலங்களிலெல்லாம் அரசின் சட்டத்தை தமிழ்மக்களுக்கு அமுல்படுத்தி அதனூடாகப் கிடைத்த சுகங்களையெல்லாம் அனுபவித்து, அதிலிருந்து ஓய்வு பெற்றபின் தமிழர் நலனில் அக்கறை வந்ததுதான் ஆச்சரியம். வடக்கு மாகாணசபையினைப் பயன்படுத்தி பெறக்கூடியதையும் பெறாது 'தமிழர் பேரவை' என்பதை அரசியலற்ற மக்களுக்கான அமைப்பாக தொடங்கியவர், இன்று 'தமிழ் மக்கள் கூட்டணி' என்ற கட்சியுடன் உலாவருகின்றார். தமிழ் மக்களும் அவர்களுடைய உள்ளூர் பிரதிநிதிகளும் தீபம் காட்டி ஆராத்தி எடுக்கத் தொடங்கி விட்டனர்.

கடைசியாக சென்றவாரம் மட்டக்களப்பில் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தினர் சி.வி. விக்னேஸ்வரனைச் சந்தித்துள்ளனர்.

கிழக்குத் தமிழர் ஒன்றியம் அரசியல் அமைப்பு அல்ல; மக்கள் அமைப்பு. அனைத்து அரசியல் கட்சிகளையும் கிழக்கு வாழ் தமிழர்களுக்காக ஒன்றிணைப்பதும் கிழக்கிற்கான அரசியல் தலைமைத்துவத்தினை உருவாக்குவதுமே கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் பணி. இன்று அந்தப் பணிக்காக உழைத்தவர்கள் பலர் ஓரங்கட்டப்பட்டுள்ளார்கள் என்று செய்திகள் வருகின்றன. இந்த நிலையில் சி.வி.விக்னேஸ்வரனுடனான சந்திப்பு நடந்துள்ளது.

இதேவேளை கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் காரைதீவுக் கிளைக் கூட்டம் காரைதீவு சண்முகா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற போது கிழக்குத் தமிழர் ஒன்றிய துணைத் தலைவரும் அம்பாறை மாட்டத் தலைவருமான தே.சர்வானந்தன் பின்வருமாறு உரையாற்றியிருந்தார். 'ஜனநாயக வழிவந்த தமிழ்க் கட்சிகளில் வடக்குத் தலைமைகள் ஆக்கிரமிப்புச் செய்தன. கிழக்கில் தலைமைகள் தோன்றுவதற்கு இடமளிக்கவில்லை. ஆயுதப் போராட்ட வரலாற்றிலும் ஆயுதக் குழுக்களின் தலைவர்களும் வடக்குத் தலைமைகளாகவே இருந்தனர். வடக்குத் தலைமைகள் கிழக்கு மக்களையிட்டு, அவர்களது அபிலாசைகள், தேவைகள், பிரச்சினைகளையிட்டு கொஞ்சமும் அக்கறை செலுத்தவில்லை. மாறாக அவர்களது சுகபோகத்திலும் சுயநலனிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்.' (வீரகேசரி.22.03.2019) என வடக்குத் தலைமைகளை காரசாரமாக விமர்சித்திருந்தார்.

ஆகவே சி.வி. விக்னேஸ்வரனுடனான இந்தச் சந்திப்பையும் கிழக்கு தமிழர் ஒன்றியம் அதன் துணைத்தலைவரின் கருத்தின் அடிப்படையில் கையாள முயல வேண்டும். வடக்குத் தலைமை கொண்ட கட்சி ஒன்றிடம் வழமைபோல தஞ்சமடைவதாக அவை அமைந்துவிடக்கூடாது.

சொந்தக் காலில் நிற்போம் எனக் கூறும் கிழக்குத் தமிழர் ஒன்றியம் சி.வி. விக்னேஸ்வரனின் கதாநாயகத் தனத்தால் வெற்றிகொள்ளப்பட்டுவிடக் கூடாது.

இதில் எந்தக் கதாநாயகர்களானாலும் சரி கதாநாயக வேடம் கொள்ள ஆசைப்பட்டு அலைந்துதிரிபவர்களும் சரி தமிழ் மக்களையும் அவர்களுடைய பிரச்சினைகளையும் தேவைகளையும் அவர்களுக்கூடாக, அவர்களின் பங்குபற்றலுடன் எதிர்கொள்ளத் தவறியிருக்கிறார்கள் என்பதே உண்மையாகும்.

தமிழ் மக்கள் எப்போது இந்தக் கதாநாயக அரசியலை தூக்கி எறிந்து விட்டு மக்களை நம்பி மக்கள் அரசியலைக் கட்டி எழுப்பி தங்கள் கோரிக்கைகளை கையிலெடுக்கிறார்களோ அன்றுதான் தமிழ் மக்கள் தங்களுடைய கோரிக்கைகளில் வெற்றி பெற முடியும் என்பதை உலக வரலாறுகள் எமக்கு காட்டுகின்றன. இது கிழக்கு தமிழ் மக்களுக்கும் பொருந்தும். அவர்களுக்காக செயற்படுவதாகக் கூறும் அமைப்புக்களுக்கும் பொருந்தும்.



# அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய பூசை விபரங்கள்

## 4ஆம் மாத விஷேட பூசைகள் - 2019

14- 04 – 2019 ஞாயிற்றுக்கிழமை சித்திரை வருடப் பிறப்

15 – 04 – 2019 திங்கட்கிழமை ஏகாதசி விரதம்

17 – 04 – 2019 புதன்கிழமை பிரதோஷ விரதம்

19 – 04 – 2019 வெள்ளிக்கிழமை சித்திரா பௌர்ணமி

22 – 04 – 2019 திங்கட்கிழமை சங்கடகர சதுர்த்தி

27 – 04 – 2019 சனிக்கிழமை நடேசர் அபிஷேகம்

30 – 04 – 2019 செவ்வாய்க்கிழமை ஏகாதசி விரதம்



அரங்கம்
செய்திகள்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
அரங்கம் பத்திரிகையில் விளம்பரம் செய்ய
சிறப்புத் தள்ளுபடி முழுப்பக்க விளம்பரங்களுக்கு
ரூபாய் பத்தாயிரம் மாத்திரமே!



Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa